# வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்





ஓ.கே.குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு எண்: கி894.8'1109 வரவுப்பதிவு எண்: 37648
2660

# பொது நூலகம்

**சட்ட திட்டங்கள், விதி முறைகள் முழுவதும் அடங்கிய ஆவணங்களை பார்வைக்காக மட்டும் பெற்றுக் கொள்ளலாம்.**

இரவல் பெறுவோருக்கு இரு அங்கத்துவ அட்டைகள் வழங்கப்படும். இவற்றிற்கு ஒரு முறையில் இரண்டு புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.

விலாசத்தில் ஏதும் மாற்றங்கள் ஏற்படின் ஒரு வாரத்துக்குள் அறியத்தரல் வேண்டும்.

இரவல் பெறும் புத்தங்கள் 14 தினங்களுக்குள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட திகதிக்கு மீள ஒப்படைக்கப்படாத புத்தங்களுக்கு கீழ் காணப்படும் முறையில் தண்டப் பணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 01 முதல் 30 நாட்கள் வரை | - | ஒரு நாளுக்கு ஒரு புத்தகத்திற்கு 25 சதம். |
| 31 முதல் 90 நாட்கள் வரை | - | ஒரு புத்தகத்திற்கு ரூபா. 20/= ப்படி. |
| 91 முதல் 180 நாட்கள் வரை | - | ஒர புத்தகத்திற்கு ரூபா. 30/= ப்படி. |
| 181 க்கு மேல் நாட்கள் வரை | - | ஒரு புத்தகத்திற்கு ரூபா. 50/= ப்படி. |

வேறு ஒருவரால் கோரப்படாதவிடத்து, இரவல் பெற்ற எந்தவொரு புத்தகத்தையும் நூலகரின் அனுமதியுடன் மேலும் 14 நாட்களுக்கோ அல்லது அதற்குக் குறைந்த காலத்துக்கோ காலக்கெடு பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு காலக்கெடு பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட நூலை நூலகத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

இரவல் பெறுவோர் புத்தகங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இவற்றில் பக்கங்களை மடித்தல், பென்சில் போன்றவற்றால் குறியீடுகள் இடுதல் கூடாது. நூல்களைப் பெற முன்பு அவற்றிற்கு ஏதும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டு பிடித்து அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்காது குறைகளுடன் எடுத்துச் செல்லும் புத்தகங்களுக்கு இரவல் பெறுவோரே பொறுப்பாளியாவார். மாரி காலங்களில் புத்தகங்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லல், கொண்டு வருதல் வேண்டும்.

இரவல் வழங்கும் பகுதி புதன்கிழமை தவிர்ந்த ஏனைய தினங்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 7.00 மணி வரை திறந்திருக்கும். அரச விடுமுறை [illegible]ங்களிலும், நூலக அதிகாரிகள் முடிவு செய்யும் எந்தவொரு தினத்திலும் [illegible] முழுமையாக மூடப்படும்.

இரவல் பெறுவோரால் எந்தவொரு புத்தகமும் வெறொருவருக்கும் கைமாற்றம் செய்யக் கூடாது. தொற்று நோயாளிகள் எவரும் புத்தகங்களை இரவல் பெறக் கூடாது. அவ்வாறானவர்களுக்கு எந்தவொரு நபரும் நூலகத்தின் எந்தவொரு புத்தகத்தையும் பாவிப்பதற்கு இடமளிக்கக் கூடாது.

ஏதும் ஒரு நூல் தொற்று நோய் பீடிக்கப்பட்ட ஒருவரின் பாவனையில் இருந்ததெனத் தெரிந்தால் உள்ளூராட்சி அதிகாரிக்கு அறிவிக்கவும். உள்ளூராட்சி அதிகாரிகளால் அவை அழித்தொழிக்கப்படும். அவ்வாறு ஒழிக்கப்பட்டால், இரவல் பெற்றவர் புத்தகத்தின் பெறுமதியைப் போல் இரு மடங்கு கட்டணம் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.81109 37648
2660

# PUBLIC LIBRARY

## LENDING LIBRARY

Please check the condition of the books you select and inform the Officer-in-charge if any pages or plates are missing or the books are otherwise damaged, before handing your tickets.

See Rules and Regulations. Extract on page opposite.

This book must be returned on or before the date marked below.

128 L.-

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

2353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்

C. M. C.
PUBLIC LIBRARY

எழுதியவர்

ஓ.கே.குணநாதன்

வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவுத் தகவல்கள்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும் |
| வகை | : | இலக்கிய ஆய்வு |
| ஆசிரியர் | : | ஓ. கே. குணநாதன்<br>**64**, கதிர்காமர் வீதி<br>அமிர்தகழி<br>மட்டக்களப்பு |
| வெளியீடு | : | வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம் |
| புகைப்படம் | : | ஆதிபோட்டோ ஸ்ரீபராஜன் |
| உரிமை | : | நூலாசிரியர் |
| கணணிப் பொறி அச்சு | : | ஒன் - லைன் பிறின்டேர்ஸ் வவுனியா |
| அச்சிட்டோர் | : | ஆதவன் அச்சகம், வவுனியா |
| முதற்பதிப்பு | : | ஜனவரி 1,1998 |
| விலை | : | **125/-** |


## BIBILIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| TITLE | : | VAVUNIYAVUM ILAKKIYA VALARCHCHIUM |
| CATEGORY | : | LITERATURE RESEARCH |
| AUTHOR | : | O.K. KUNANATHAN<br>64, KATHIRAMAR ROAD<br>AMIRTHAKALI<br>BATTICALOA |
| PUBLISHERS | : | VAVUNIYA MUTHTHAMIL KALA MANTRAM |
| PHOTOGRAPH | : | AATHI PHOTO STEPARAJAN |
| COPY RIGHT | : | AUTHOR |
| COMPUTER TYPE SETTING | : | ON - LINE PUBLISHERS (PVT) LTD. VAVUNIYA. |
| PRINTERS | : | AATHAVAN PRINTERS, VAVUNIYA |
| FIRST EDITION | : | JANUARY 1,1998 |
| PRICE | : | 125/- |



894481109
37648 2660
30305
38/50
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா நகரபிதா திரு.ஜி.ரி. லிங்கநாதன் அவர்களின் ஆசிச்செய்தி

" இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்" - பாரதி

இலக்கியங்கள் தொன்மையுடையதாயிருப்பினும், காலமாற்றத்தோடு ஒட்டி அதுவளர்ந்து வந்தது போதாதென்றே கருதலாம். ஒரு இனத்தின் வளர்ச்சியில் முதுகெலும்பாக அமைவது அதன் மொழியே ஆகும். மொழி வளர்ச்சியில் இலக்கியங்களின் பங்களிப்பே பிரதானமானதாகும். இலக்கியங்கள் பொதுவாக புத்தி புகட்டுவனவாகவே இருந்தாலும் மனிதனின் உடல், உள வளர்ச்சியையும், மனித விழுமியங்கள், கலை கலாசார, பாரம்பரியங்களையும் சமகால நிகழ்வுகளையும் உள்ளடக்க வேண்டியது அவசியமாகின்றது.

தமிழர்களின் இலக்கிய வளர்ச்சி போர்க்காலச் சூழலினால் சின்னாபின்னப்பட்டுச் சிதைந்து போகுமளவிற்குத் தள்ளப்பட்டுள்ளது. இக்காலத்தில் இதைக் கட்டிக்காப்பதற்கும், வளர்ச்சியுறச் செய்வதற்கும் இவ்வாறான ஓர் முயற்சி காலத்தின் தேவையாகும்.

இந்த வகையில் இம்மாவட்டத்தின் இலக்கிய ஆரம்பம், கல்வி வளர்ச்சி, இலக்கியப் படைப்பு, இலக்கியப் படைப்பாளர் போன்ற விசேட அம்சங்களையும், இம்மண்ணின் இலக்கிய வளர்ச்சியுடன்தொடர்புடைய நூல்கள், வெளியீடுகள் போன்றவற்றை நிழற்படமாகக் கொண்டும் அமைந்திருப்பது "வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்" என்ற நூலின் விசேட அம்சமாகும். சமூக மேம்பாட்டுக்காக ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபடுவோரை ஊக்குவிக்கத்தக்கதாகவும், ஏனையோரை ஈடுபடுத்தக்கூடிய உந்து சக்தியை வழங்கக் கூடியதாகவும் இது அமையும் என்பது கண்கூடு.

இவ்வாறான ஒரு வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருவகை கொள்வதோடு, இதன் எழுத்தாளர் திரு.ஓ.கே.குணநாதன் அவர்களின் எழுத்தாற்றல் மென்மேலும் வளர்ச்சி பெறவும், இவரது சேவை இலக்கிய உலகிற்கு தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் எனவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டப்பட வேண்டிய ஆய்வு

நிகழ்கால நிகழ்வுகளை எதிர்காலத்தில் காலக் கண்ணாடியாகக் காட்டுவது இலக்கியம். வாழ்க்கையின் ஒவ்வொரு கால கட்டத்தினையும் இந்த இலக்கியங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. இப்படிப்பட்ட இலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளிகள்கூட சாகாவரம் பெற்றவர்கள்.

இலக்கிய உலகினைப் பொறுத்தவரையில் ஆக்க இலக்கியங்கள் படைக்கப்படுமளவிற்கு ஆய்வு இலக்கியங்கள் மிகக் குறைவாகவே வருகின்றன. அதிலும் குறிப்பாக இலங்கையில் இப்படியான ஆய்வு நூல்கள் வருவது மிக மிகக் குறைவென்றே கூற வேண்டும். அப்படி வரும் இலக்கிய ஆய்வு நூல்கள் கூட முழுமையாகச் செய்யப்பட்டதில்லை. முடியில்லாமல் ஏதோவொரு இடத்திலிருந்து அடி எடுத்து வைக்கும். ஆனால் இந்த வவுனியா மாவட்டச் செயலக நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தின் "வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்" என்ற நூலானது வழமையான ஆய்வு இலக்கிய வடிவிலிருந்து வேறுபட்ட ஒரு வித்தியாசமான வடிவமைப்பில் வரும் ஒரு முழுமையான ஆய்வு நூலாகக் கருதப்பட வேண்டிய ஈழத்து நூல் என்பது குறிப்பிடப்பாலது.

வவுனியாவின் இலக்கியம் முன்னேற்றமடையாமைக்குரிய காரணங்களை ஆராய்ந்து, எங்கிருந்து இலக்கிய வளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்னென்ன இலக்கிய நூல்கள் வெளியாகியுள்ளன என்பதையும் இலக்கிய நூல்களைப் படைத்தவர்களின் முழுமையான விபரங்களையும் சேகரித்து அவர்களின் புகைப்படங்களுடன் சேர்த்துக் கொண்டிருப்பதுடன், வவுனியாவில் வெளியான நூல்களை இனங்கண்டு அதன் முன்பக்க அட்டைப் படத்தினைக்கூட நூலிலே கொண்டு வந்திருப்பது அரிய சாதனைதான். பாராட்டுதற்குரியதே!

இந்நூலானது வவுனியாவின் இலக்கியம் சம்பந்தமான ஆய்வுக்கு ஒரு அத்திவாரமாகும். இனிவரும் காலங்களில் வவுனியாவின் இலக்கியம் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு நிச்சயமாக கைகொடுத்து உதவும்.

இத்தகைய நூல்கள் பல வெளிவர வேண்டும். இந்த ஆய்வு முயற்சி வெற்றியளிக்க வாழ்த்துகிறேன்.

**க.கணேஷ்**

**அரசாங்க அதிபர்**
**வவுனியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இதயத்திலிருந்து......

தொழில் நிமித்தம் இளைஞர் சேவை அதிகாரியாக இந்த வவுனியா மண்ணிலே காலடி எடுத்து வைத்து – இந்தப் பூமியை நேசித்து மக்கள் என்னை நேசித்தபோது – நான் இந்த மண்ணில் விட்டுப்போகும் ஒரு தடயம் வவுனியா மண்ணைக் கிண்டிக் கிளறி ஆய்வு செய்து எழுதிய இந்த "வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்"தான்.

ஆத்ம திருப்தியடைகின்றேன்.

1995ஆம் ஆண்டு புரட்டாதியிலே மதிப்புக்குரிய தமிழ்ப் பேரறிஞர் அகளங்கன் அவர்களால் என் நெஞ்சத்திலே போட்ட இந்த வித்தானது 1995ஆம் ஆண்டுக்கான வவுனியா பிரதேச இலக்கிய விழா மலரான கலை மருதத்திலே "தொண்ணூறுகளில் வவுனியாவின் கலை இலக்கிய வளர்ச்சி ஒரு நோக்கு" என்ற கட்டுரை வடிவிலே முளையானது. அதனைத் தொடர்ந்து அடிக்கடி தமிழ்ப் பேரறிஞர் அகளங்கள் அவர்களால் அதற்கு ஊற்றப்பட்ட நீரும் போடப்பட்ட உரமும் இன்றுஅது வளர்ந்து "வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்" என்ற நூல் வடிவில் மரமானது.

இம் மரமானது எதிர்காலத்தில் பல விழுதுகளை ஊன்றிய கிளை பரப்பிய விருட்சமாக வளர்ந்து விடும் என்ற நம்பிக்கை உண்டு.

இந்த இடைபபட்ட இரண்டு ஆண்டுக் காலப்பகுதியிலே பலரைச் சந்தித்து பல தேடல்களைச் சேகரிக்க வேண்டியிருந்தது. இயன்றவரை சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு தொண்ணூறு சதவீத திருப்தியுடன் இந்நூலைத் தொகுக்கக் கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் எனக்குத் தெரியாமல் எத்தனையோ விடயங்கள் இருக்கலாம். ஆனாலும் இந் நூலானது வவுனியாவின் இலக்கியத்தைப் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு அத்திவாரமாக அமையும்.

இவ்வாய்வை மேற்கொள்ள, உடனுக்குடன் தட்டச்சுச் செய்து தந்து எனது இலக்கிய வளர்ச்சியில் அக்கறை காட்டி வரும் தற்பொழுது நோர்வேயில் வசிக்கும் திருமதி பாரதி றெஜினோல்ட் அவர்களுக்கும் பாராட்டுரைகளை வழங்கிய வவுனியா நகரமுதல்வர் ஜீ.ரி. லிங்கநாதன், வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஆகியோருக்கும்.

என் நூல் வெளியீடுகளுக்குக் கைகொடுத்து உதவும் மதிப்புக்குரிய வர்த்தகப் பிரமுகர்களுக்கும், புகைப்படப் பிடிப்பாளர் ஆதிபோட்டோ அ.ஸ்ரிபராஜன் மற்றும் நூலை அழகாக கணணி அச்சுப்பொறி செய்து தந்த வவுனியா ஒன்-லைன் பதிப்பகத்தின் ந. நல்லநாதர்(ராகவன்), த. ஷாந்தநேசன் அவர்களுக்கும், அழகாக நூலை அச்சிட்டுத் தந்த ஆதவன் அச்சகத்திற்கும்,

எல்லாவற்றிற்கும் மேலாக இந்நூலை தன் சொந்த நூல்போலக் கருதி சகல வழிகளிலும் உதவியதுடன் இந் நூலுக்கு முன்னுரையும் தந்த தமிழ்ப்பேரறிஞர் அகளங்கன், பத்திரிகையாளர் பி. மாணிக்கவாசகம் ஆகியோருக்கும் இந் நூலின் ஆய்வுக்குத் தகவல்களைத் தந்துதவிய அனைவருக்கும் என் நன்றிகள்.

என்றும் பிரியமுடன்

**ஓ.கே. குணநாதன்**
**வெளிக்குளம்**
**வவுனியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இது என்
தந்தைக்கும்
தாய்க்கும்
சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்

வவுனியாவின் இலக்கிய வளர்ச்சி பற்றித் தெளிவுறுத்துவதாயின், முதலில் வவுனியா என்று இங்கு கருதப்படுகின்ற பிரதேசத்தைச் சொல்லியே ஆகவேண்டும்.

இப்பொழுது வவுனியா அரசாங்க அதிபரின் செயற்பாட்டு மாவட்டத்திற்குள், அதாவது வவுனியா மாவட்டத்திற்குள் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகள் அடங்குகின்றன.

அவற்றுள் ஒன்று சிங்களப் பிரிவாகவும், ஏனைய மூன்றும் தமிழ்ப் பிரிவுகளாகவும் விளங்குகின்றன.

வவுனியா பிரதேசச் செயலாளர் பிரிவு, நெடுங்கேணி பிரதேசச் செயலாளர் பிரிவு, வெங்கலச்செட்டிகுளம் பிரதேசச் செயலாளர் பிரிவு என்பவை மூன்றுமே அப்பிரிவுகளாகும்.

இவற்றுள் வாழ்ந்த, வாழுகின்ற மக்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசும் மக்களே. இங்கு வாழ்ந்தவர்களின், வாழ்பவர்களின் முக்கியமான தொழில் விவசாயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ்பேசும் மக்களின் கலை இலக்கியச் செயற்பாடுகளைச் சரியாக, முழுதாக ஆராய வேண்டியது ஆய்வாளர்களின் முக்கியமானதொரு கடமையாகும்.

எனினும் இந்நூல், இப்பிரதேசங்களின் இலக்கிய வளர்ச்சி பற்றியும், வெளிவந்த நூல்கள் பற்றியும், இலக்கிய வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க பங்களிப்பினைத் தனித்தும், அமைப்புக்கள் மூலமாகவும், செய்தவர்கள் பற்றியுமே சொல்கிறது என்பதால், கலைச் செயற்பாடுகள் பற்றிய ஆய்வு தவிர்க்கப்பட வேண்டியதொன்றாக உள்ளது.

## வவுனியாவும் கல்வியும்

வவுனியாவின் இலக்கிய வளர்ச்சியைப் பற்றி நோக்குவதாயின், முதலில் இங்கு வாழ்கின்ற மக்களைப் பற்றிப் பார்ப்பது மிக முக்கியமானது.

தாலாட்டு, ஒப்பாரி, தொழிற்பாட்டு, கோவிற்பாட்டுக்கள், கோலாட்டப் பாட்டுக்கள் முதலான நாட்டார் பாடல்களை இயற்றுவதற்குக் கல்வி அறிவு அத்தியாவசியமானதொன்றல்ல.

அன்றாடம் பேசுகின்ற மொழியின் பரிச்சயத்தினாலும், உணர்வின் உந்துதலினாலும், கவி படைக்கின்ற; இன்னதென்று விபரிக்க முடியாத ஒரு ஆற்றலினாலும் நாட்டார் பாடல்கள் படைக்கப்படுகின்றன.

19ம் நூற்றாண்டில் இப்பகுதிகளின் இலக்கிய வடிவம், கவிதை வடிவம் மட்டுமே 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்பே மேலைத்தேய இலக்கிய வடிவங்களான, சிறுகதை, நாவல், முதலானவை இங்கே வளர்ச்சி பெறுகின்றன.

சிறுகதை, நாவல் முதலானவற்றைப் படைப்பதற்கு ஓரளவு கல்வி அறிவு தேவைப்படுகின்றது. மரபுக் கவிதைகளைப் படைப்பதற்கு அதைவிடவும் அதிகமான அறிவும், ஆற்றலும் தேவைப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70இற்குப் பின் இப்பிரதேசத்திற்குள் புகுந்த புதுக்கவிதை மட்டுமே இலகுவாகக் கையாளக் கூடிய இலக்கிய வடிவம் என்று சொல்லலாம்.

வவுனியாவின் மக்கள் குடியிருப்புக்கள் எல்லாம் கிராமங்களில், குளங்களுக்கு அருகாமையிலேயே அமைந்திருக்கின்றன. குளங்களின் பெயராலேயே ஊர்களும் அழைக்கப்பட்டன.

இன்றும் இப்பிரதேசங்களில் உள்ள கிராமங்களின் பெயர்கள் எல்லாம் குளம், மோட்டை, மடு, கட்டு, முறிப்பு முதலான நீர் நிலைகளோடு சம்பந்தப்பட்ட பெயர்களாகவே இருப்பதைக் காணலாம்.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த இம் மக்களின் வாழ்விற்கு அத்தியாவசியமானதொரு அம்சமாகக் கல்வியின் தேவை அமைந்திருக்கவில்லை. ஏனெனில் மனிதனின் அடிப்படை அத்தியாவசியமான தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவைக்கும், கல்விக்கும் எந்தவித சம்பந்தமும் காணப்படவில்லை.

சமயம் பரப்ப முயன்ற கிறிஸ்தவப் பாதிரிமார்களால், இங்குள்ள பல கிராமங்கள் எட்டியும் பார்க்கப்படவில்லை. ஏனெனில் கல்வியின் மூலமான சமயமாற்றத்துக்கு பாரம்பரியக் கிராமங்களில் இடம் இருக்கவேயில்லை.

இருந்த ஓரிரு நகரங்களை அண்டிய குடியிருப்புக்களிலே வாழ்ந்தவர்களில் சிலர் கிறிஸ்தவர்களால் கட்டப்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பதற்காகச் சென்று சமயம் மாறிக் கொண்டார்கள். அவர்களையே, வவுனியாவில் கல்வியின் தேவையை உணர்ந்து கற்ற முன்னவர்களாகக் கொள்ளலாம்.

கிராமங்களிலும், வசதி படைத்த ஓரிருவர்; கல்வி, அறிவுக்குரியது, கௌரவத்துக்குரியது, அதிகாரம் செய்யக்கூடிய பதவிகளுக்குரியது, தமது சூழலிலே உள்ளவர்களைவிடத் தம்மை பணத்தால் மட்டுமன்றி வேறுவிதத்தாலும் உயர்த்துவதற்குரியது என்ற

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் உணர்ந்து கொண்டு, வவுனியாவில் இருந்து 90 மைல்களுக்கப்பால் இருக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய பாடசாலைகளிலே தமது ஆண்பிள்ளைகள் கல்வி கற்க ஏற்பாடு செய்தனர்.

வியாபார நிமித்தமாக வவுனியாக் கிராமங்களுக்கு வந்து சென்ற, யாழ்ப்பாணத்து வியாபாரிகளின் தொடர்பு காரணமாகவும் சிலர் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி கல்வி கற்பித்திருக்கின்றார்கள்.

இது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்த நிகழ்ச்சி. உடையார் முதலான பதவிகளும் 50களுக்கு முன்பு கற்றவர்கள் பெற்றுக் கொண்ட பதவிகளாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து புராணங்களுக்குப் பயன் சொல்லும் ஆற்றல் படைத்த சிலர்; வவுனியாக் கிராமங்களுக்கு வந்து, கிராமத்து இளைஞர்களுக்குப் புராணங்களை வாசிக்கவும், பயன் சொல்லவும் கற்பித்து ஒருவகையான சமயக் கல்வியை ஊட்டியது சாதாரணர்களுக்கும் கல்வியோடு ஒரு தொடர்பை ஏற்படுத்தியது.

இந்நூற்றாண்டின் நடுப்பகுதி அளவில், வவுனியா நகரத்திற்கு அண்மையில் இருந்தவர்களும், யாழ்ப்பாணத்துத் தொடர்பு உள்ளவர்கள் சிலரும், வசதி படைத்த சிலரும், யாழ்ப்பாணத்துப் பெரிய பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்று அரச உத்தியோகங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

ஒரு சிலர் இந்தியாவிற்குச் சென்றும் கல்வி கற்றிருக்கிறார்கள்.

குறிப்பாக, நொச்சிமோட்டையிலிருந்து அமரர் கா. லோகசிங்கம், அமரர் த. கதிரவேலு, திரு. செ. கந்தையா ஆகியோர் இந்தியாவிற்குச் சென்று படித்துப் பட்டம் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் அமரர் கா. லோகசிங்கம் அவர்கள், பாவற்குளம் மகாவித்தியாலயம், வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், ஓமந்தை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராக இருந்து பெருங் கல்விப் பணி செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்து சமய நிறுவனங்கள், கிராமங்கள் தோறும் பாடசாலைகளை அமைக்கத் தொடங்கிய பின்பும், அவற்றை அரசாங்கம் கையேற்ற நிகழ்வுகள் நடைபெற்ற காலங்களிலும்தான் அடிப்படைக் கல்வியே கிராமங்களில் பெறக்கூடியதாக இருந்தது.

அதுவும் ஐந்தாம் ஆண்டு வரையிலேயே மட்டுப்படுத்தப்பட்டது. அதற்கு மேல் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இன்மை, கட்டிட வசதி இன்மை, பெற்றோர்களுக்குப் பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டும் என்ற அக்கறை இன்மை,போதிய பொருளாதார வசதியின்மை முதலானவை; அதற்குக் காரணங்களாக அமைந்தன.

ஓமந்தை மகாவித்தியாலயம், நெடுங்கேணி மகாவித்தியாலயம், செட்டிகுளம் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் க.பொ.த. சாதாரணதர வகுப்புகள் (அப்போதைய **S.S.C.**) ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும் போதிய வளர்ச்சியை அப்பாடசாலைகள் அடைய முடியாமலேயே இருந்தன. அதனால் கிராமப்புறத்து மாணவர்கள் வவுனியா நகரப் பாடசாலைகளுக்கு வந்து கல்வி கற்க வேண்டி இருந்தது.

நகரத்தில் இருந்த சில பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைக் கற்பிக்க முயன்ற பெற்றோருக்கு, போக்குவரத்து வசதியின்மை, நகரப் பாடசாலைகளில் விடுதி வசதி இன்மை, நகரத்தில் பிள்ளைகள் தங்கிப் படிப்பதற்கு எந்தவிதமான வசதிகளும் இல்லாமை முதலானவை பெரும் இடைஞ்சலாக இருந்தன.

நகரத்தில் இருந்து ஒரு மைல் தூரத்திற்குள் இறம்பைகுளம், குடியிருப்பு முதலான ஓரிரு கிராமங்கள் மட்டுமே இருந்தன



NF 37648

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை நடாத்திய வர்த்தகர்களில் யாழ்ப்பாணத்தவரும். இஸ்லாமியரும் மட்டுமே இருந்தனர். அவர்கள் கடைகளிலே வாழ்ந்தனர். பின்பு நிலங்களை வாங்கி வீடுகளைக் கட்டிக் கொண்டனர். ஒரு சில அரசாங்கக் குடியிருப்புக்களும் நகரத்திற்குள் இருந்தன.

பின்தங்கிய கிராமத்தில் இருக்கும் ஒருவர் தங்கள் பிள்ளைகளைக் கொண்டு வந்து நகரத்தில் தங்க வைப்பதற்கு எந்தவித வசதியும் இருக்கவில்லை.

இப்பொழுது வவுனியா சைவப் பிரகாச மகளிர் மகாவித்தியாலயமாக இருக்கும் சைவப்பிரகாச வித்தியாசாலை: **(Hindu Board)** யாழ்ப்பாணத்து இந்து சபையினால் (ராஜரட்ணம்) நடாத்தப்பட்ட காலத்தில், வவுனியா குடியிருப்பிலிருந்து இப்போதுள்ள இடத்திற்கு மாற்றப்பட்ட பின்; அப்பாடசாலையின் அதிபராக இருந்த திரு. சிதம்பரப்பிள்ளை அவர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள வசதி படைத்த பெரியவர்களை வற்புறுத்தி **5**ம் ஆண்டிற்கு மேற்பட்ட கல்வியைத் தங்கள் பாடசாலையில் பிள்ளைகள் பெறுவதற்கு அரும் முயற்சி செய்தார்.

இதன் மூலமாக பல கிராமப் புறத்து மாணவர்கள் அப்பாடசாலையில் வந்து கல்வி கற்கத் தொடங்கினர்.

இருப்பினும், நகரத்தில் அமைந்துள்ள அப்பாடசாலைக்குக், குறைந்தது 5 மைல்களுக்கப்பாலேதான் கிராமங்கள் பெரிதும் அமைந்திருந்த காரணத்தினால் துவிச்சக்கர வண்டியில் வந்து கல்வி கற்க வேண்டிய நிலைமை இருந்தது.

துவிச்சக்கர வண்டி வரங்குவதற்கு வசதி இல்லாதவர்கள், இரு நேரப் பாடசாலை என்ற கர்ரணத்தினால் மத்தியான உணவை நகரக் கடைகளில் எடுப்பதற்கு வசதியற்ற வறிய மாணவர்கள், இந்தக் கல்வியைப் பெற முடியாமல் சிரமப்பட்டனர். இத்தடைகளைத் தாண்டியும் சிலர் கல்வி கற்றிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடர்பாடுகளைப் போக்குவதற்காக, திரு. கு. சிதம்பரப்பிள்ளை அவர்கள்: வசதிகள் மிகக் குறைவாக இருந்தபோதிலும் அப்பாடசாலையில் ஆண்கள், பெண்கள் தங்குவதற்கு விடுதி வசதியையும் செய்தார்.

ஆண்களில் **15-20** இற்குட்பட்ட மாணவர்களும், பெண்களில் **5-10** இற்குட்பட்ட மாணவிகளும் விடுதியில் தங்கி இருந்து கல்வி கற்றனர்.

இவர்கள் எல்லோரும் வவுனியாவில் இருந்து குறைந்தது ஏழு மைல்களுக்கப்பாலே இருக்கின்ற பம்பைமடு, கள்ளிக்குளம், வேலங்குளம், தவசியாகுளம், வீமன்கல்லு முதலான மிகவும் பின்தங்கிய கிராமத்தைச் சேர்ந்தவர்களே.

இவர்களில் மாணவிகளும், ஆசிரியைகளும் அங்கு சமைத்துச் சாப்பிட்டார்கள். மாணவர்களும் ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள கடைகளில் சாப்பிட்டார்கள். வருடந்தோறும் வயல் விளைச்சலின் பின்பு சாப்பாட்டிற்குரிய பணத்தைக் கடைக்குக் கொடுப்பதான நம்பிக்கையின் அடிப்படையில் இவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

அக்காலத்தில் மேற்குறித்த வவுனியா சைவப் பிரகாச வித்தியாசாலையே வவுனியாவின் மிகச் சிறந்த பாடசாலையாக விளங்கியது. இது **1955-1963** காலகட்டத்திற்குரிய நிலைமையாகும்.

இக்காலத்தில், வவுனியா பட்டாணிச்சூர், சூடுவெந்தபுலவு, புளித்தறித்த புளியங்குளம் முதலான இடங்களைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் சிலர் தம்பிள்ளைகளை மன்னாரிலுள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிக் கல்வி கற்பித்தனர்.

இச்சம காலத்தில் இப்போதைய இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் கிறிஸ்தவப் பாடசாலையாக இருந்த காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் தங்கிப் படிப்பதற்குரிய வசதி அங்கே இருந்தது. கிராமப்புறத்து ஒரு சில மாணவிகளே அங்கு தங்கிக் கல்வி கற்றனர்.

வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில், விடுதியில் தங்கிக் கற்ற மாணவர்களில் பம்பைமடு நா. தியாகராஜா க.பொ.த. சாதாரண தரம் சித்தி எய்தி க.பொ.த. உயர்தரத்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டதாரி (**B.A.**) யானார். அப்பொழுது வவுனியாவில் க.பொ.த. உயர்தரம் (**H.S.C.**) இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஓமந்தை மகாவித்தியாலயத்தில் **1958**ல் க.பொ.த. உயர்தரம் (அப்போதைய **H.S.C.**) ஆரம்பிக்கப்பட்டது. இப்போது நெடுங்கேணிப் பிரதேசச் செயலாளராக இருக்கும் திரு. க. ஐயம்பிள்ளை முதலாவது மாணவனாகக் கல்வி கற்றார். இருப்பினும் அது தொடரவில்லை.

**1968**ல்தான் முதன்முதல், தற்போதைய வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர கலை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது வவுனியாவில் வேறெந்தப் பாடசாலையிலும் க.பொ.த. உயர்தர வகுப்பு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சைவப் பிரகாச வித்தியாசாலை விடுதியில் தங்கிக் கல்வி கற்ற, மிகப் பின் தங்கிய கிராமமாகிய தவசியாகுளத்து சி. செல்வராஜா, க.பொ.த. சாதாரணம், க.பொ.த. உயர்தரம் ஆகிய வகுப்புக்களை யாழ்ப்பாண மகாஜனாக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றில் கற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தைச் சிறப்புப் பாடமாகப் படித்து கலைப்பட்டம் (**B.A.**) பெற்றார். பின்பு **M.A.** பட்டமும் பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் விரிவுரையாளராகக் கடமை புரிந்தார். தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய காமினி மகாவித்தியாலயத்தில் 'சீனியர்ஸ் கூல்' என்ற பெயரில் இயங்கிய பாடசாலை, தற்போதுள்ள கண்டிவீதி இடத்திற்கு மாற்றப்பட்டு, வவுனியா தமிழ் மகாவித்தியாலயமாக உருவெடுத்து **1963**களின் பின் பெரும் பாடசாலையாக மாறத் தொடங்கியது.

இருப்பினும் **1971** இலேயே, வவுனியாவில் முதன் முதல் க.பொ.த. உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள், இங்கு ஆரம்பமாகின. அப்பொழுது வவுனியாவில் வேறெந்தப் பாடசாலையிலும் க.பொ.த. உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவில்லை.

வவுனியா நகருக்குள் இருக்கும் இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபைத் தமிழ்க்கலவன் பாடசாலையே **(C.C.T.M.S.)** வவுனியா நகரத்தின் முதலாவது பாடசாலை. இருந்தபோதிலும் அப்பாடசாலையின் கல்விப் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு இல்லை என்றே கூறிக் கொள்ளலாம். ஏன் என்பது தனியாக ஆராயப்பட வேண்டியது.

வெங்கலச் செட்டிகுளப் பிரிவைச் சேர்ந்த பொ.பூலோகசிங்கம், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருப்பவர். இப்பிரதேசத்தின் பெரும் கல்விமானாக மதிக்கப்படுபவர். ஏராளமான ஆய்வு நூல்களை வெளியிட்டவர். இந்து கலாசார அமைச்சின் முதலாவது இந்துக் கலைக் களஞ்சியத்தை எழுதியவர்.

எனவே, **70**களின் பின்பே வவுனியாவில் பரவலான கல்வி நிலை காணப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டே வவுனியாவின் இலக்கிய, நூல் வெளியீடு சம்பந்தமான மதிப்பீடுகளைச் செய்ய முடியும்.

வவுனியாவில் **70**ற்கு முன் ஒரே ஒரு வன்னியூர்க் கவிராயர், சிறுகதை எழுத்தாளராகவும், கட்டுரை, கவிதை, எழுதியவராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்ததற்கும், ஏனைய பிரதேசங்களைப் போல இலக்கிய வளர்ச்சி காணப்படாததற்கும், மேற்கூறிய கல்வி நிலையையே முக்கிய காரணமாகக் கூறலாம்.

## இலக்கிய முயற்சிகள்

**1880**இல் சிலம்பு நாதபிள்ளை என்ற கொக்குவிலைச் சேர்ந்த புலவர் ஒருவரினால் எழுதி வெளியிடப்பட்ட **100** பாடல்களைக் கொண்ட ஓமை அந்தாதி என்னும் நூலை; வவுனியா ஓமந்தை கற்பகப் பிள்ளையார் மேல் பாடப்பட்ட பிரபந்தமாகக் குறிப்பிட்டால், அதுவே வவுனியாப் பிரதேசத்தின் முதலாவது நூல் வெளியீடாக அமையும். அந்நூல் வவுனியாவில் வெளிவிடப்பட்டதற்கான சான்று எதுவும் இல்லை.

**1953**இல் பம்பைமடு அ.பூலோகசிங்கம் அவர்கள் வெளியிட்ட 'சண்முக வேலவர் பேரில் கிளிவிடு தூது' நூல் பார்வைக்குக் கிட்டியுள்ளது. பிரபல விஷ வைத்தியராக விளங்கிய அவரது தந்தையார் திரு. வ.அருணாசலம் அவர்களிடம் இருந்த பழைய ஏட்டுப் பிரதிகளில் இருந்து இத்தூதுப்பிர பந்தம் எடுக்கப்பட்டு பதிக்கப்பட்டதாக அவர் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலைப் பாடியவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. இந்நூலின் காப்புப் பாடலை பம்பைமடு சே.நாகலிங்கம் (கவிஞர் அகளங்கனின் தந்தையார்) அவர்கள் இயற்றிக் கொடுத்ததாக, வெளியீட்டாளரும் காப்புப் பாடலை இயற்றியவரும் சொல்லி இருக்கிறார்கள்.

இவை இரண்டும் அந்தாதி, தூது ஆகிய இரண்டு சமயப் பிரபந்த வகைகள் என்ற போதிலும், நூல் வெளியீட்டு முதல் முயற்சிகள் என்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியூர்க் கவிராயரின் "ஈழத்துக் காவிய தீவகம்" சிறுகதைத் தொகுப்பு **1973**இல் வெளிவந்தது. வன்னியூர்க் கவிராயர் சிறுகதை, கட்டுரை, கவிதை என பல படைப்புக்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டு, எழுத்துலக முன்னோடியாகத் திகழ்ந்தார்.

கல்வி வளர்ச்சி மிக மந்தகதியில் இருந்ததாலும், கிராமங்கள் நகரை விட்டு தூரத்தில் இருந்ததனாலும், தொடர்புச் சாதன வசதிகள், பத்திரிகை, சஞ்சிகைகள் வாசிக்கும் பழக்கம் மக்களிடம் மிகக் குறைவாகவே இருந்ததனாலும், பல முன்னேற்றங்களை அடைய முடியாதிருந்த வவுனியாவில், **1970**களில் உத்தியோக நிமித்தமாக வந்து சேர்ந்த சிலர் கலை இலக்கிய வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டனர்.

அவர்களில், யாழ்ப்பாணம் உடுப்பிட்டியிலிருந்து வவுனியாவிற்கு வந்து வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய திரு.எஸ்.தில்லைநடராஜா அவர்கள் மிக முக்கியமானவர். இப்போது தமிழ்மணி உடுவை எஸ்.தில்லை நடராஜா என அழைக்கப்படுபவரும், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றுவரும் இவரே

இவர் நாடகங்களை நடித்து மேடையேற்றியும் கவியரங்குகளை நடாத்தியும், வவுனியாவின் கலை இலக்கிய வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றார். அப்போது யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த கவிஞர் அகளங்கனையும் வவுனியாக் கவியரங்குகளுக்கு அழைத்து அவருக்கு இலக்கிய உந்துதலை அளித்துள்ளார்.

பின்பு வவுனியாவில் பல உயர்பதவிகளை வகித்து, வவுனியா அரசாங்க அதிபராகவும் இருந்த உடுவை எஸ். தில்லை நடராஜா அவர்களின் "நிர்வாணம்" என்ற சிறுகதைத் தொகுதி தமிழகத்து லீல்லி தேவ சிகாமணி நினைவுப் பரிசு பெற்றது யாவரும் அறிந்ததே. அவரைப் பற்றிய விபரங்கள் நூலினுள் அடங்குகின்றன. முதன்முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரையும் இணைத்து வவுனியாவின் இலக்கிய வளர்ச்சியை ஏற்படுத்த முயன்றவர் என்ற பெருமை இவரையே சாரும்.

தற்பொழுது நாடறிந்த எழுத்தாளராகக் கல்விமானாக விளங்கும் செங்கைஆழியான் (க.குணராசா) அவர்கள் வவுனியா வெங்கலச்செட்டிகுளப் பிரதேசத்தில், மாவட்ட இறைவரி உதியோகத்தராகப் (**D.R.O.**) பணியாற்றிய காலத்தில் நெடுந்தீவுப் பிரதேச மண்வாசனை நாவலான "வாடைக்காற்று" நாவலின் வெளியீட்டு விழாவை, வெங்கலச் செட்டிகுளப் பகுதியில் மிகச் சிறப்பாகச் செய்தார்.

அத்தோடு, காட்டாறு, யானை, முதலான நாவல்களையும் சில சிறுகதைகளையும் அப்பகுதி மண்வாசனை கமழும் வண்ணம் அற்புதமாகப் படைத்தளித்தார். அவரது இப்படைப்புக்களில் "காட்டாறு" நாவல் பரிசுகளை வென்றது. சிறந்த மண்வாசனை நாவலாகவும் மதிக்கப்படுகின்றது.

இவரது இலக்கியப் படைப்புக்கள் வவுனியாப் பிரதேச மக்களுக்கு, இலக்கியம் படைப்பதில் பெரும் உந்துதலாக இருந்தது மறுக்கமுடியாதது. இருப்பினும் இவர் அமைப்புரீதியாக எழுத்தாளர்களை உருவாக்கவில்லை. தனி மனித சாதனையாகவே அவரது பங்களிப்பு அமைந்தது.

வன்னியூர்க் கவிராயரும் இக்கால கட்டத்துக்கு முந்தியவராகத் தனித்தே இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**1974**இல் சரவணையூர் சுகந்தன், பூநகர் மரியதாஸ் ஆகியோர் வவுனியாவில் வாழ்ந்த காலத்தில் அப்போது வேகமாக வளர்ந்து வந்த புதுக்கவிதை வடிவத்தைப் பயன்படுத்தி, சில கவிதைகளைத் தாம் எழுதியும், பலரிடம் வாங்கியும், "வழிகாட்டிகள்" என்ற பெயரில் நூலாக வெளியிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் வெளியீடு யாழ்ப்பாண மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் நிகழ்த்தப்பெற்றது. அத் தொகுப்பில் கவிஞர் அகளங்கனின் கவிதையும் இடம் பெற்றது.

70களின் பிற்பகுதியில், தனித்தனியாகச் சிறுகதை, கவிதை கட்டுரைகளை எழுதிப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியிட்டுக் கொண்டிருந்த கவிஞர் அகளங்கன், பி.மாணிக்கவாசகம், வன்னியூர் அன்ரனி மனோகரன், முதலானோர் ஒன்று சேர்ந்தனர்.

1979இல் அகளங்கனைத் தலைவராகவும், பி. மாணிக்கவாசகம், ஆர்.என்.எஸ்.மணி ஆகியோரை இணைச் செயலாளர்களாகவும் கொண்டு வவுனியா இலக்கிய வட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே வவுனியாவின் முதலாவது அமைப்புரீதியான இலக்கியக்குழு எனலாம்.

இவ்வமைப்பில் இருந்த கவிஞர் முத்து சிவலிங்கம், ஆர்.விக்னேஸ்வரன், கவிஞர் கண்ணையா, வன்னியூர் அன்ரனி மனோகரன், சுகுமார், ரஜனிகாந், க.குமாரகுலசிங்கம், தமயந்தி முதலானோரை இன்று நினைவு கூரக் கூடியதாக உள்ளது.

வவுனியா பஸ் நிலையத்தில் அமைந்திருந்த புத்தக, பத்திரிகை, விற்பனை நிலையமான "கவிதா ஸ்ரோர்ஸ்" வவுனியா இலக்கிய வட்டத்தின் விலாசமாகவும் இருந்தது.

இக்கால கட்டத்தில், வன்னியூர் அன்ரனி மனோகரன் பல சிறுகதைகளை எழுதி பரிசுகளும் பெற்றார். கவிஞர் அகளங்கன் பல கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் எழுதினார். ஆர்.விக்னேஸ்வரனின் சிறுகதையொன்று ஆனந்தவிகடனில் வெளிவந்தது. பி. மாணிக்கவாசகம், ஆர். என்.எஸ்.மணி, சுகுமார் ஆகியோர் எழுத்தாளர்களாகவும், சிறந்த பத்திரிகையாளர்களாகவும் உருவாகினர். திரு.பி.மாணிக்கவாசகம் பெரும் புகழ் பெற்ற சர்வதேச பத்திரிகையாளராக விளங்குகிறார். கவிஞர் முத்து சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி முதலான பத்திரிகைகளில் துணை ஆசிரியராக இருந்து இன்று நவமணி பத்திரிகையின் ஆசிரியராக இருக்கிறார்.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் அப்போது கல்வி கற்றுக் கொண்டிருந்த திரு.க.சுவர்ணராஜா இவ் இலக்கிய வட்டத்தோடு இணைந்து, ஆர்வத்தோடு செயற்பட்டு சிறுகதைகளை எழுதினார். இப்பினும் அவர் இலக்கியப் பயணத்தைத் தொடராமல், **M.E** . பட்டதாரியாகி வவுனியாக் கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய ஆலோசகராகப் பணி புரிகின்றார்.

ஆர். என்.எஸ்.மணி அவர்கள் தற்பொழுது மலையகத்தில் வாழ்கின்றார். சுகுமார் அவர்கள் சிலாபம் பிரதேசத்தில் வாழ்கின்றார். ஆர்.விக்னேஸ்வரன் அவர்கள் இந்தியாவில் வாழ்ந்துகொண்டு ஸ்ரீராம் விக்னேஸ்வர் என்ற புனைபெயரில் பல சிறுகதைகளை எழுதியும், கவிதைகளை எழுதி, கவியரங்குகளில் பங்கு கொண்டும், புகழ்பெற்று வருகிறார். இவரது சிறுகதையொன்று பரிசு பெற்று ஆனந்த விகடன் சஞ்சிகையில் அண்மையில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இவர் திரைப்பட ஒளிப்பதிவுப் பயிற்சியை முடித்து, திரைப்பட ஒளிப்பதிவாளராகுவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்.

வன்னியூர் அன்ரனி மனோகரன் மிகவும் ஆற்றல் படைத்த, பரிசுகள் பலவென்ற எழுத்தாளர். இப்பொழுது பொறியியலாளராகி எழுத்துத் துறையிலிருந்து பெருமளவு ஒதுங்கிக் கொண்டார்.

இக்காலத்தில் வவுனியாவில் வட்டாரக் கல்வி அதிகாரியாக **(C.E.O.)** இருந்த திரு. இ.சிவானந்தன் (கவிஞர் இ. முருகையன் அவர்களின் சகோதரர்) அவர்கள் வவுனியா இலக்கிய வட்டச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தார்.

வவுனியா இலக்கிய வட்டத்தின் அமைப்புரீதியான வளர்ச்சி **1980**களில் பலரையும் எழுத்துத்துறையில் புகச் செய்தது. அவர்களில் இரா.உதயணன் முக்கியமானவர். தொடர் நாவல்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகளையும், பத்திரிகைகளில் அவர் எழுதினார். இப்பொழுது இவர் இலண்டனில் வாழ்கின்றார்.

வவுனியா இலக்கிய வட்டத்தின் பணி வவுனியாவின் இலக்கிய வளர்ச்சியில் மிகவும் முக்கியமானது. இக்காலத்தில்தான் **1982**இல் கவிஞர் அகளங்கனின் குறுங்காவியமான "சேரர் வழியில் வீரர் காவியம்" என்னும் கவிதை நூல் வெளிவந்தது.

**1983** வரை மிகச் சிறப்பாக இயங்கி வந்த வவுனியா இலக்கிய வட்டம் அவ்வாண்டு இனக் கலவரத்தின்பின் தன் பணிகளைக் குறைத்துக்கொண்டது. பின்பு வவுனியா இலக்கிய கர்த்தாக்கள் தனித்தனி எழுத்துப் பணிபுரிந்தனர். பலர்கூடி இயங்க முடியாத சூழல் இப் பின்னடைவிற்கு முக்கியமானதொரு காரணியாகும்.

**1987** இன் ஆரம்பத்தில் வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம் தோற்றம் பெற்றது. வவுனியாப் பிரதேச உதவி அரசாங்க அதிபராக அப்பொழுது பதவி வகித்த திரு. க. ஐயம்பிள்ளை அவர்கள் நல்ல இலக்கிய ஆர்வலராகவும், படைப்பாளியாகவும் இருந்தார்.

அவரது மெல்லிசைப்பாடல்கள் இலங்கை வானொலியில் ஒலித்தன. கவியரங்குகளில் கவிதைகள் ஒலித்தன. பிற்காலத்தில் அவரது சிறுகதைகளும் பத்திரிகைகளில் வெளிவந்தன. அவரது முயற்சியால் முத்தமிழ்க் கலாமன்றம் ஆரம்பிக்கப்பட்டது.

திருகோணமலையைச் சேர்ந்த கவிஞர் ச. அருளானந்தம் அவர்கள் வவுனியாப் பிரதேசக் கல்விப் பணிமனையில் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் இம் மண்ணின் இலக்கிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் ஆர்வம் மிக்கவராக இருந்தார்.

வவுனியா முத்தமிழ்க் கலாமன்றத்தின் தலைவராக அவரே தெரிவு செய்யப்பட்டார். திரு. பி. மாணிக்கவாசகம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அக்காலத்தில் கவிஞர் அகளங்கன் அவர்கள் மலையகத்தில் ஆசிரியராக இருந்த காரணத்தால் முத்தமிழ்க் கலாமன்றச் செயற்குழுவில் அவர் இடம் பெறவில்லை.

இருப்பினும் அவரது இலக்கியத்தேறல், நளவெண்பா கதை ஆகிய இரு நூல்களும் **(1988, 1989)** வவுனியா முத்தமிழ்க் கலாமன்றத்தினூடாகவே வெளிவந்தன என்பதும், அவரது "வாலி" வெளியீட்டு விழா **1987** ல் வவுனியா முத்தமிழ்க் கலாமன்றத் தினால் நடாத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**1989** ம் ஆண்டு ஆரம்பத்தில் முத்தமிழக் கலாமன்றத்தின் இளைஞர் அமைப்புப் போல உருவாக்கப்பட்ட வன்னி இலக்கியக் கலாமன்றம் அவ்வாண்டில் வவுனியா திலீபனின் "எனது இராகங்கள்" என்ற கவிதை நூலை வெளியிட்டது.

**1990**ம் ஆண்டின் இடம் பெயர்வுகளின் பின் வவுனியா இலக்கியக் கலாமன்றம் முற்றாகவே குலைந்து போனது.

வவுனியா இலக்கிய வட்டத்தின் தலைவராக இருந்த கவிஞர் அகளங்கன் **1991**ன் பிற்பகுதியில் வவுனியா நகரத்தை வாழ்விடமாகக் கொண்டபின்பு மீண்டும் இலக்கிய முயற்சிகளை முன்னெடுக்கத் தொடங்கினார்.

வவுனியா இலக்கிய வட்டத்தின்இணைச் செயலாளர்களில் ஒருவராக இருந்த திரு. பி. மாணிக்கவாசகம் அவர்களே வவுனியா முத்தமிழ்க் கலாமன்றத்தின் செயலாளராகவும் இருந்ததனால், இரு முக்கிய அமைப்புக்களும் இணைந்து கொண்டன. வவுனியா இலக்கிய வட்டம் அத்தோடு செயலிழந்தது.

**1992**ல் வவுனியாக் கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவி வகித்த கவிஞர் ச. அருளானந்தம் கவிஞர் அகளங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளர் திரு. பி. மாணிக்கவாசகம் ஆகிய ஆற்றல் வாய்ந்த மூவரின் கூட்டு முத்தமிழ்க் கலாமன்றத்திற்கு உயிர் கொடுத்தது.

முத்தமிழ்க் கலாமன்றத்தின் உறுப்பினர்களின் இடம் பெயர்வு அமைப்புச் சீர்குலைவிற்குக் காரணமாகியது. அதன் தலைவர் செயலாளர் ஆகியோரோடு கவிஞர் அகளங்கனும் இணைந்து இலக்கியப் பணிபற்றிய திட்டங்களை வகுத்தனர்.

அக்கால கட்டத்தில் அமைதியான, ஆக்கபூர்வமான இலக்கியப் பணிக்கு நு ல் வெளியீடுகளே பொருத்தமானது எனக் கருதிச் செயற்பட்டனர்.

**1992**ல் கவிஞர் அகளங்கனின் "அன்றில் பறவைகள்" என்ற வானொலி நாடகத் தொகுப்பு நூலும், "இலக்கியச் சிமிழ்" என்ற கட்டுரைத் தொகுப்பு நூலும் முத்தமிழ்க் கலாமன்றத்தினால் வெளியிடப்பட்டன.

இவற்றில் "அன்றில் பறவைகள்" நூல் தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. "இலக்கியச் சிமிழ்" மட்டக்களப்பில் உதயம் நூல்வெளியீட்டகத்தினால் இரண்டாம் பதிப்புச் செய்யப்பட்டது.

இதே ஆண்டில் கவிஞர் அகளங்கன் அவர்களின் "முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்" எனும் நூல் வவுனியா கல்வித் திணைக்களத்தின் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினால் வெளியிடப்பட்டது.

இதே ஆண்டில் முத்தமிழ்க் கலாமன்றத் தலைவர் கவிஞர் ச. அருனானந்தம் அவர்களின் "பாட்டுப்பாடுவோம்" என்ற சிறுவர் பாடல் நூல் வெளிவந்தது. இவரது "இன்பக் கனிகள்" என்ற சிறுவர் பாடல் நூல் ஒன்று **1990**ல் வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992ல் வவுனியா அரசாங்க அதிபராகக் கடமையேற்ற உடுவை. எஸ். தில்லைநடராஜா அவர்கள் வவுனியா இலக்கியச் செயற்பாடுகளில் மீண்டும் தன்னை இணைத்துக் கொண்டார்.

1993ல் வவுனியா மாவட்ட இலக்கிய விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி கவிஞர்கள், கலைஞர்கள் எழுத்தாளர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து இலக்கிய எழுச்சியை ஏற்படுத்தினார்.

அவ்விழாவில் கவிஞர் அகளங்கனின் "தென்றலும் தெம்மாங்கும்" என்ற கவிதை நூலும், அருணா செல்லத்துரையின் "வீடு" என்ற தொலைக்காட்சி நாடக, வானொலி நாடக நூலும், திரு. த. ம. தேவேந்திரனின் "ஓடி விளையாடு பாப்பா 1" என்ற விளையாட்டுத்துறை சார்ந்த நூலும் வெளியிடப்பட்டன. இதே ஆண்டில் கவிஞர் கண்ணையா அவர்களின் "கவிதைப் பூக்கள்" என்ற கவிதை நூலும் வெளிவந்தது.

இக்காலத்தில் வவுனியாக் வல்வியியற் வல்லூரிக்கு விளையாட்டுத்துறை விரிவுரையாளராக வந்த திரு. த. ம. தேவேந்திரன் அவர்கள் தன்னையும் வவுனியா இலக்கிய வளர்ச்சிப் பணியில் இணைத்துக் கொண்டார். இவர் வவுனியாவை வாழ்விடமாகக் கொண்டவர். முன்பு பல சிறுகதைகளையும் சிறு கதைத் தொகுப்பு நூல், விவரண நூல் முதலானவற்றையும் வெளியிட்ட அனுபவம் மிக்க ஆற்றலுள்ளவரான இவர் முத்தமிழ்க் கலாமன்றத்தினருடன் இணைந்து செயற்பட்டார். இவர் பற்றிய விபரங்கள் உள்ளே தரப்பட்டுள்ளன.

இவ்வாண்டு ஆரம்பத்தில் இந் நூலின் ஆசிரியரான தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் இளைஞர்சேவை அதிகாரியாக, மட்டக்களப்பிலிருந்து வவுனியாவிற்கு வந்து சேர்ந்த எழுத்தாளர் திரு. ஓ. கே. குணநாதன் அவர்கள், மிகவும் உற்சாகமாக இலக்கியச் செயற்பாட்டில் ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதிகளின் பல கிராமங்களுக்கும் அவர் சென்று, இளைஞர்களின் இதயங்களில் இலக்கிய உணர்வுகளைத் தட்டி எழுப்பினார்.

தேசிய மட்ட கலை, இலக்கியப் போட்டிகளில் அவரது கலை, இலக்கிய அணி பல முதலாம் இடங்களைப் பெற்று வவுனியாவிற்குப் பெருமை சேர்த்தது.

அவரது" நகைச்சுவைக் கதைகள்" **(1993)**, "வீரஆனந்தன் – சுதந்திரம்" **(1995)**, "மாயக்கிழவி" **(1996)** முதலான நூல்கள் வவுனியாவில் வெளியிடப்பட்டன. இவற்றில் "வீர ஆனந்தன் – சுதந்திரம்" என்ற சிறுவர் இலக்கிய நூல் **1995**ல் வெளிவந்த சிறந்த சிறுவர் இலக்கியத்திற்கான பரிசை வடக்கு – கிழக்கு மாகாண சாகித்திய மண்டலத்திடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

**1993**ல் உடுவை எஸ். தில்லைநடராஜா அவர்களுக்கும், கவிஞர் அகளங்கன் அவர்களிற்கும், இந்து கலாசார இராஜாங்க அமைச்சு, தமிழ் மணி பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

உடுவை எஸ். தில்லைநடராஜாவின் "நிர்வாணம்" என்ற சிறுகதைத்தொகுதி இந்தியாவில் இரண்டாம் பதிப்புச் செய்யப்பட்டது மட்டுமன்றி "தெமல கெட்டி கதாவ" என்ற பெயரில் சிங்கள மொழிபெயர்ப்பாகவும் வெளிவந்தது.

**1994**ல் அவரது "மந்திரக்கண்ணாடி", "கடற்கன்னி" ஆகிய இரு சிறுவர் கதைகள், வவுனியா இறைம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபையினரால், அப்பாடசாலையின் கேட்போர் கூட கட்டிட நிதிக்காக வெளியிடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1994**ல் கவிஞர் அகளங்கனின் "இலக்கிய நாடகங்கள்", "மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்" ஆகிய நாடக, ஆய்வு நூல்கள் வெளிவந்தன. இவற்றில் முத்தமிழ்க் கலாமன்ற வெளியீடாக வந்த "இலக்கிய நாடகங்கள்" என்ற நாடக நூலுக்கு **1994**ல் வெளிவந்த சிறந்த நாடக நூலுக்கான வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. கொழும்புத் தமிழ்ச் சங்கமும் அவ்வாண்டுக்கான சிறந்த நூலாகத் தெரிவு செய்தது.

"மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்" என்ற அவரது ஆய்வு நூலை சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனம் தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து வெளியிட்டது.

**1995**ல் முத்தமிழ்க் கலாமன்றச் செயலாளர் திரு. பி. மாணிக்கவாசகம் அவர்களின் "நம்பிக்கையோடு நிம்மதியை நாடும் யாழ்ப்பாணம்" என்ற சமகால விவரண நூலும், திரு. ச. கிருஷ்ணராஜா அவர்களின் "வண்ண மலர்கள்" என்ற சிறுவர் பாடல் நூலும் வெளிவந்தன.

இந்த வரிசையில் ஞான சிரோன்மணி வித்துவான் வ. செல்லையா அவர்களின் "செயா உலக நீதிக் கதைகள்" என்ற சிறுவர் போதனை நூலையும் குறிப்பிடலாம்.

**1996**ல் கவிஞர் அகளங்கன் அவர்களின் "அகளங்கன் கவிதைகள்" என்ற நூல் முத்தமிழ்க் கலாமன்ற வெளியீடாக வந்தது. அத்தோடு அருணா செல்லத்துரையின் "நந்தி உடையார்" என்ற நாடக நூலும் வெளிவந்தது.

"நந்தி உடையார்" நாடக நூல் அருணா செல்லத்துரை அவர்களுக்கு **1996**ம் ஆண்டுக்கான சிறந்த நாடக நூலுக்கான தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய நூல் வரிசையில் வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் அண்மைக் காலப் பகுதியில் "கதிரை மலைப் பேரின்பக் காதல்" என்ற நூலின் இரண்டாம் பதிப்பினையும், தவத்திரு ஆறுமுக நாவலர் பெருமானின் சைவ வினாவிடையின் தொகுப்பை மிகச் சிறந்த முறையில் சைவ வினாவிடைத் (தொகுப்பு) என்ற பெயரிலும் வெளியிட்டது.

வ/இந்துமாமன்றம் **1993**ன் பின் பன்னிரு திருமுறை அறிமுகம், ஆத்திசூடி (விளக்கவுரை) கொன்றை வேந்தன் (விளக்கவுரை), வாக்குண்டாம் (விளக்கவுரை), சிவபுராணம் (பொருளுரை) நாமறிந்த நாவலர் முதலிய சமய நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நூல்கள் கவிஞர் அகளங்கன் அவர்களால் எழுதிப் பதிப்பிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இறைபணிச் செம்மல் திரு. வை. செ. தேவராஜா அவர்கள் "திருவாசகம்" நூலை இந்தியாவில் அச்சிட்டு, வவுனியாவில் வெளியீடு செய்தார்.

விழாமலர் வரிசையில், **1982**ல் வெளிவந்த "பண்டார வன்னியன் விழா மலர்" **1992**ல் வெளிவந்த "உள்ளக் கமலம்" **1995**ல் வெளிவந்த "கலைமருதம்" **1996**ல் கோவில்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில் (கோவிற்குளம் சிவன் வோயில்) திருக்குட முழுக்கு விழா சிறப்பு வெளியீடாகிய "சிவத்துவ மலர்", **1997**ல் வெளிவந்த "மருத நிலா" ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இவற்றில் "பண்டாரவன்னியன் விழா மலர்", மலரை வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபை வெளியிட்டது. "உள்ளக் கமலம்" என்ற மலரை வவுனியா, சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை (வவுனியா கல்வித் திணைக்களம்) வெளியிட்டது. "கலை மருதம்" மலரை வவுனியா பிரதேச கலாசாரப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டுள்ளது. "மருத நிலா" மலரை வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் இலக்கிய விழா **(1994/95)** வவுனியாவில் நடைபெற்றதன் நினைவாக வவுனியா மாவட்டச் செயலகம் வெளியிட்டது.

**1995**ல் வவுனியா பிரதேச செயலாளர் - திருமதி இமெல்டா அற்புதராஜா அவர்களால் உருவாக்கப்பட்ட பிரதேச கலாசாரப் பேரவையும், திரு. ச. கிருபைராஜா அவர்களால் உருவாக்கப்பட்ட வவுனியா வள்ளுவர் கலை இலக்கியக் கழகமும், அண்மையில் அமைக்கப்பெற்ற வவுனியா இலக்கிய நண்பர்கள் அமைப்பும், வவுனியாப் பிரதேச இலக்கிய வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பினை வழங்கி வருகின்றன.

வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவராக கவிஞர் அகளங்கன் அவர்களும், செயலாளராக திரு. ஓ.கே. குணநாதன் அவர்களும் பொருளாளராக திரு. பி. மாணிக்கவாசகம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு, செயற்படுகின்றனர்.

வள்ளுவர் கலை இலக்கியக் கழகத்தின் தலைவராக திரு. ச. கிருபைராஜா அவர்களும், செயலாளராக திரு. கு. மகிழ்ச்சிகரன் அவர்களும் உப தலைவராக திரு. ஜெ.கார்த்திகேயன் அவர்களும் செயற்படுகின்றனர்.

வவுனியா இலக்கிய நன்பர்கள் அமைப்பு ஒவ்வொரு மாதப் பௌர்ணமியன்றும், இரண்டரை மணி நேரம் கூடி ஆக்க பூர்வமான கருத்தாடல்களை, ஆய்வுகளைச் செய்கின்றது.

இதன் அமைப்பாளர்களாக வவுனியாக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு. ந. இரவீந்திரன் அவர்களும், யாழ் பல்கலைக் கழக வவுனியா வளாக விரிவுரையாளர் திரு. க. ஸ்ரீகணேசன் அவர்களும், கவிஞர் அகளங்கன் அவர்களும் செய்றபடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் அண்மைக்காலத்தில் இலக்கியப் பணியில் ஈடுபட்டு வரும் சிலரையும் இங்கு குறிப்பிடலாம். குறிப்பாக கவிஞர் அப்துல் சமத், திருமதி த. நிறைமதி, செல்வி. யாமினி சிவராமலிங்கம் முதலான பழையவர்களும், **90** களின் பின் வவுனியாவை வாழ்விடமாகக் கொண்டு இலக்கிய வளர்ச்சியில் பங்கெடுக்கும் வவுனியாக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு. ந. இரவீந்திரன், யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக விரிவுரையாளர் திரு. க. ஸ்ரீகணேசன் ஆகியோரும் மற்றும் பூந்தோட்டம் க. இரவீந்திரன், திரு. பால. பேராதரன், திருமதி. விஜயலக்சுமி ராஜமனோகர் ஜனாப் எம்.எஸ் றம்சீன், காலஞ் சென்ற ஜனாப் றஜாப்தீன், ஜனாப் ஆப்தீன் ஆகியோரும் குறிப்பிடத்தக்க வர்கள்.

இந்நூலில், நூல் வெளியீடு செய்த முக்கியஸ்தர்களினதும், குறிப்பிடத்தக்க கணிசமான இலக்கியப் பங்களிப்பை வவுனியாவில் செய்த சிலரதும் விபரங்கள் அடங்கியுள்ளன.

வவுனியாவை வாழ்விடமாகக் கொண்டவர்கள், வவுனியாவில் வாழ்ந்த காலத்தில் வவுனி யாவின் இலக்கிய வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் பற்றிய விபரங்களை இந்நூலில் சந்திக்கலாம்.

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய நூல்களும் வெளியீடுகளும்

வவுனியாவில் பல துறைகளைச் சார்ந்த பல நூல்கள் வெளிவந்துள்ளன. வவுனியாவைச் சேர்ந்தவர்களால் படைக்கப்பட்ட நூல்கள் வவுனியாவில் தற்காலிகமாக வாழ்ந்தவர்களால் படைக்கப்பட்ட நூல்கள் எனப் பல வெளிவந்துள்ளன. அவை ஒவ்வொரு துறைகளினடிப்படையில் பாகுபடுத்தித் தரப்படுகிறது.

## சிறுகதை நூல்கள்



வவுனியாவைப் பொறுத்தவரையில் பலரால் ஆங்காங்கே சிறுகதைகள் எழுதப்பட்டிருக்கின்ற போதிலும் சிறுகதைகள் நூலுருப் பெற்றமை மிகக் குறைவென்றே கூறவேண்டும். அந்த வகையில் பார்க்கும்பொழுது இரண்டே இரண்டு சிறுகதைத் தொகுதிகள் மாத்திரமே வெளிவந்திருப்பதனைக் காணமுடிகின்றது.



ஒன்று 1973ஆம் ஆண்டு "வன்னியூர்க் கவிராயர்" என்று அழைக்கப்படும் எஸ்.எல். சவுந்திரநாயத்தினால் எழுதப்பட்ட "ஈழத்துக் காவிய தீபகம்".




மற்றது 1993ஆம் ஆண்டு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட உடுவை எஸ். தில்லைநடராசா எழுதிய "நிர்வாணம்" சிறுகதைத் தொகுதி. பின் இந்நூலானது இந்தியாவில் லில்லி தேவசிகாமணி நினைவுப் பரிசனைப் பெற்றதுடன் "தெமில கெட்டிக் கதாவ" என்னும் பெயரில் சிங்கள மொழியில் நூல் வடிவம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவல் நூல்கள்

நாவல் என்ற வரிசையை நோக்கும்பொழுது வவுனியாவில் நாவல் வெளியிட்ட பெருமையை வவுனியா வெங்கலச் செட்டிக்குள பிரதேச செயலாளர் பிரிவு பெற்றுக் கொள்ளுகிறது. எழுபதுகளின் ஆரம்பத்தில் வெங்கலச் செட்டி குள பிரதேசத்தில் மாவட்ட இறைவரி உத்தியோகஸ்தராகப் (D.R.O.) பணியாற்றிய செங்கை ஆழியான்(கலாநிதி க. குணராசா) அவர்களினால் "வாடைக்காற்று" என்னும் நூல் செட்டிகுளத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இது ஒரு மீனவ சமுதாயத்தின் கதையாகும்.






வவுனியாவைச் சேர்ந்த ஒருவரால் எழுதப்பட்டு நூல் வடிவம் பெற்ற முதலாவது நாவலும், வவுனியாவின் முதலாவது பெண் படைப்பாளியினால் படைக்கப்பட்ட நாவல் என்ற பெருமையையும் பெறுவது "பிரியதர்ஷினி" என்ற புனைபெயரில் செல்வி யாமினி சிவராமலிங்கத்தினால் எழுதப்பட்ட "நிலவே நீ மயங்காதே". பெண்ணியம் சம்பந்தமான இச் சமூக நாவல் **1990**இல் யாழ்ப்பாணத்தில் மீரா வெளியீடாக வந்தது.




வவுனியா குருக்களூரில் வாழ்ந்து தற்பொழுது மதுரையில் வசித்து வருபவரா சுப்பிரமணியம் ஈழத்தீபனின் "கலையாத கோலங்கள்" என்னும் சமுதாய சீர்திருத்த நாவல் **23.02.1992** இல் இந்தியாவில் வெளியாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை நூல்கள்



வவுனியாவின் நூல் வெளியீடுகளுடன் ஒப்பிடுகையில் கவிதை நூல்களே அதிகளவில் வெளியிடப்பட்டுள்ளதாக ஆய்வுகள் காட்டுகின்றன.



1974ஆம் ஆண்டு சரவணையூர் சுகந்தன், பூநகர் மரியதாஸ், அகளங்கன் (நா.தர்மராஜா) ஆகியோர் சேர்ந்து "வழிகாட்டி" புதுக்கவிதை தொகுதி நூலொன்றை வெளியிட்டுள்ளனர்.



1975இல் ம. புவனேந்திரராஜா என்பவரினால் "ஈழத்துப் பாரதியார் கவிதைகள்" என்னும் நூல் வெளியிடப்பட்டது.

தந்தை செல்வாவின் மறைவினையொட்டி அகளங்கன் அவர்களால் எழுதப்பட்ட "செல்வா என்று ஆணையிடாய்" என்னும் இரங்கல் கவிதை நூல் 1977இல் யாழ்ப்பாணத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.




1982இல் அகளங்கனால் எழுதப்பட்ட "சேரர் வழியில் வீரர் காவியம்" என்னும் குறுங்காவியம் வவுனியாவில் வெளியிடப்பட்டது.

1985இல் கவிஞர் ச. முரளீதரனுடன் இணைந்து அகளங்கன் எழுதிய "சமவெளி மலைகள்" என்னும் கவிதைத் தொகுதி நுவரேலியாவில் வெளியீடு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1989ஆம் ஆண்டு வவுனியா திலீபன் என்ற இளங்கவிஞர் "எனது இராகங்கள்" என்னும் புதுக்கவிதைத் தொகுதியைத் தந்துள்ளார்.

1993ஆம் ஆண்டிலே 'கவிஞர் கண்ணையா' என்ற புனைபெயருக்குள் புகுந்து கொண்டு கவி படைக்கும் முனிசாமி இராமையாவின் 'கவிதைப் பூக்கள் ' என்னும் நூல் வெளியாகியுள்ளது.




அதே ஆண்டிலே வவுனியா அரசாங்க அதிபராக இருந்த எஸ். தில்லைநடராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற வவுனியா மாவட்ட சாகித்திய விழாவின்போது அகளங்கனால் எழுதப்பட்ட "தென்றலும் தெம்மாங்கும்" என்னும் சிறிய கவிதை நூலொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

1996 இல் அகளங்கனின் "அகளங்கன் கவிதைகள்" நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

**நாடக நூல்கள்**



நாடக நூல்களைப் பொறுத்தவரையில் "அன்றில் பறவைகள்" "நந்தியுடையார்" என்னும் நூல்கள் தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுத் கொண்டும் "இலக்கிய நாடகங்கள்" என்னும் நூல் வடக்கு-கிழக்கு மாகாண இலக்கியப் பரிசினைப் பெற்றுக் கொண்ட வகையில் வவுனியா மண் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகளங்கன் எழுதி வானொலியில் ஒலிபரப்பப்பட்ட சமூகநாடகங்களின் தொகுப்பு நூல் "அன்றில் பறவைகள்" என்ற பெயரிலே **1992**ஆம் ஆண்டு வவுனியாவில் வெளியிடப் பட்டது. இந்நூல் **1992**ஆம் ஆண்டுக்கான நாடகத்திற் குரிய தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொண்டது.







**1993**ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற மாவட்ட சாகித்திய விழாவின்போது அருணா செல்லத்துரையின் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் ஒலி -ஒளி பரப்பப்பட்ட நாடகங்களின் தொகுப்பு நூலான "வீடு" வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

வானொலியில் வெளிவந்த வெளிவராத இலக்கிய நாடகங்களைக் கொண்ட அகளங்கனின் "இலக்கிய நாடகங்கள்" என்னும் நூல் வவுனியா முத்தமிழ்க் கலா மன்ற வெளியீடாக **1994**ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூல் **1994**ஆம் ஆண்டு நாடகத்துறைக்கான வடக்கு-கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் கொழும்பு தமிழ்ச் சங்கப் பரிசையும் பெற்றுக் கொண்டது.

**1997**ஆம் ஆண்டு அருணா செல்லத்துரை எழுதிய நந்தியுடையார் என்னும் நூல் வவுனியாவில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இது **1996**ஆம் ஆண்டுக்கான நாடகத்திற்குரிய தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இலக்கிய நூல்கள்



கவிதை நூல்களைப் போலவே வவுனியாவில் வெளியான சிறுவர் இலக்கிய நூல்களும் அதிகம்.



1990ஆம் ஆண்டு ச. அருளானந்தம் எழுதிய "இன்பக் கனிகள்" சிறுவர்பாடல் அடங்கிய நூலும் 1992இல் அவரின் "பாட்டுப்பாடுவோம்" என்னும் நூலும் வெளியீடு செய்யப்பட்டன.




1992இல் அகளங்கனின் "முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்" என்னும் நூல் வவுனியா சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினரால் வெளியிடப்பட்டது.



உடுவை எஸ். தில்லைநடராசா எழுதிய "மந்திரக் கண்ணாடி" "கடற்கன்னி" ஆகிய சிறுவர்கதை நூல்கள் 1994இல் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தினால் வெளியிடப்பட்டன.






"வண்ணமலர்கள்" என்னும் சிறுவர் பாடல்களை உள்ளடக்கி ந. கிருஸ்ணராசாவின் நூல் 1995ல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"சுதந்திரம்" என்றொரு சிறுவர் குறுநாவலையும் "வீரஆனந்தன்" என்றொரு சிறுவர் குறுநாவலையும் கொண்ட ஓ.கே. குணநாதனின் இரணைநூல் 1995இல் வவுனியா நகரசபை மண்டபத்தில் வெளியானது. இந்நூல் 1995ஆம் ஆண்டுக்கான சிறுவர் இலக்கியத்திற்குரிய வடக்கு-கிழக்கு மாகாண சாகித்தியப் பரிசைப் பெற்றது.





1996ஆம் ஆண்டு ஓ.கே.குணநாதன் எழுதிய "மாயக்கிழவி" என்னும் சிறுவர் குறுநாவல் வவுனியாவில் வெளியிடப்பட்டது.



வித்துவான் வ. செல்லையாவினால் எழுதப்பட்ட "செயா உலக நீதிக் கதைகள்" சிறுவர் கதைகளின் தொகுப்பு 1997ஆம் ஆண்டு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் வெளியாகியது.

அதே ஆண்டின் இறுதிப் பகுதியில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் அகளங்கனின் சிறுவர்களுக்கான பத்துக் கட்டுரைகள் அடங்கிய "செந்தமிழும் நாப்பழக்கம்" என்னும் நூல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கட்டுரை நூல்கள்



அகளங்கன் எழுதிய "வாலி" என்னும் நூல் இலங்கை கம்பன் கழக வெளியீடாக 1987இல் வெளியானது. இதன் இரண்டாம் பதிப்பு யாழ் ஸ்ரீலங்கா அச்சகத்தினால் வெளியிடப்பட்டது.

இவரினால் எழுதப்பட்ட இன்னுமொரு இலக்கியக் கட்டுரை நூலான "இலக்கியத் தேறல்" என்னும் நூல் 1988இல் வெளிவந்தது.





அகளங்கனின் "இலக்கியச்சிமிழ்" 1992ஆம் ஆண்டு வவுனியாவில் வெளியிடப்பட்டது. மீண்டும் இந்த நூல் மட்டக்களப்பு உதயம் பிரசுரத்தினால் இரண்டாம் பதிப்பு கண்டுள்ளது.

1997 மார்கழியில் வவுனியா கலை - இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் ந. ரவீந்திரனின் "பின்நவீனத்துவமும் அழகியலும்" க. ஸ்ரீகணேசனின் யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கு - விமர்சனக் கட்டுரைகள் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரைநடை இலக்கிய நூல்





1989இல் அகளங்கனின் "நளவெண்பா"கதை முத்தமிழ்க் கலா மன்றத்தினால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

1997ல் அகளங்கனின் "நாமறிந்த நாவலர்" என்ற நூல் இந்துமாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.

## விளையாட்டுத்துறை சார்ந்த நூல்கள்







இதுவரையில் வவுனியாவில் விளையாட்டுத்துறை சார்ந்த நூல்கள் நான்கு வெளியிடப்பட்டுள்ளன. இந்த நான்கு நூல்களையும் வெளியிட்ட பெருமை த.ம.தேவேந்திரனையே சாரும்.

1993ஆம் ஆண்டு "ஓடி விளையாடு பாப்பா - பாகம் i " வெளியீடு செய்து வைக்கப்பட்டது.





1994இல் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் "வொலிவோல் என்னும் நூல் வெளியீடானது.

வவுனியா கல்வியியல் கல்லூரியில் 1995ஆம் ஆண்டு "ஓடி விளையாடு பாப்பா - பாகம் ii " வெளியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997இன் ஆரம்பத்தில் "மெய்வல்லுனர் விளையாட்டுக்கள்" எனும் நூல் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் வெளியிடப்பட்டது.

## நகைச்சுவை நூல்




நகைச்சுவை இலக்கியநூல் வெளியிடப்படுவது மிக அரிது. அந்தக் குறையைப் போக்கும் வண்ணம் வவுனியாவிலே நகைச்சுவை நூலை வெளியிட்ட பெருமையை ஓ.கே. குணநாதன் பெறுகின்றார். இவர் எழுதிய "நகைச்சுவைக் கதைகள்" என்னும் நூல் **1993**ஆம் ஆண்டு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

## விவரண நூல்



பி. மாணிக்கவாசகத்தினால் சமகால நிகழ்வுகளை - யாழ்ப்பாணத்துச் சூழலை மையமாக வைத்து எழுதப்பட்ட "நம்பிக்கையோடு நிம்மதியை நாடும் யாழ்ப்பாணம்" என்னும் நூலின் வெளியீடு 1995இல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடந்தேறியது.

## ஆய்வு இலக்கிய நூல்கள்




1995 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அகளங்கனின் "மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்" என்ற ஆய்வு நூல் இந்தியாவில் அச்சிடப்பட்டு வவுனியா கல்வியியல் கல்லூரியின் தமிழ் மன்றத்தினால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொழில் நிமித்தம் வவுனியாவில் இருக்காமல் விட்டாலும் 1994ஆம் ஆண்டு வவுனியாவில் இடம் பெற்ற விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்தியாவிலிருந்து வவுனியாவுக்கு வருகை தந்த பெ.சு. மணி அவர்களின் "நூற்றாண்டு விழாக் காணும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள்" என்னும் நூல் சுவாமி ஆத்ம கணானந்தாஜி அவர்களினால் தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

## மருத்துவ நூல்கள்



கிராமங்கள் தோறும் மருத்துவம் சம்பந்தமான ஏட்டுக் குறிப்புகள் இந்த வன்னி மண்ணிலே நிறைந்து கிடக்கின்றபோதிலும் இதுவரை ஒரேயொரு மருத்துவம் சம்பந்தமான நூலே வந்திருக்கின்றது.

இது கவிஞர் கண்ணையாவினால் எழுதப்பட்டு 1997ஆம் ஆண்டு வெளிவந்த "தனி மூலிகையின்" மருத்துவ சாதனை" என்னும் நூலே ஆகும்.

## விழா மலர்கள்



வவுனியாவில் பெயர் குறிப்பிடப்படுமளவிற்கு ஐந்து விழா மலர்கள் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

1982இல் வவுனியா மாவட்ட அபிவிருத்தி சபையினால் பண்டாரவன்னியன் விழாவையொட்டி வெளியிடப்பட்டது "பண்டாரவன்னியன் விழா மலர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1992ஆம் ஆண்டு விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினால் வெளியிடப்பட்ட விழாமலர் "உள்ளக் கமலம்".




1995ஆம் ஆண்டு வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையினால் வவுனியா பிரதேச கலாசார விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டது "கலைமருதம்".




1995இல் கோயில்குளம் அகிலாண்டேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கோயில் அறங்காவலர் சபையினரால் வெளியிடப்பட்டது "சிவதத்துவ மலர்".




1997ஆம் ஆண்டு வவுனியா நகரசபையில் நடைபெற்ற 1996ஆம் ஆண்டுக்குரிய வடக்கு-கிழக்கு மாகாண இலக்கிய விழாவையொட்டி வவுனியா மாவட்டச் செயலகத்தினால் வெளியிடப்பட்டது "மருதநிலா".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவின் முன்னோடி எழுத்தாளர் வன்னியூர் கவிராயர் எஸ். எல். சவுந்தரநாயகம்



வன்னியூர்க் கவிராயர் என்று அழைக்கப்படும் எஸ்.எல்.சவுந்தரநாயகம் அவர்கள் வவுனியாவின் இயற்கை வளம் கொஞ்சும் செட்டிகுளப் பிரதேசத்தில் இலுப்பைக்குளம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

**1921.04.04.** இல் பிறந்த இவர் வவுனியாவின் எழுத்தாளர்களின் முன்னோடி என்று சொன்னால் அது மிகையாகாது. இவர் சிறந்த ஒரு எழுத்தாளராகவும் பிரபலமான கவிஞராகவும் திகழ்ந்திருக்கின்றார்.

**1953**ஆம் ஆண்டில் எழுத்துலகில் பிரவேசித்த 'கவிராயர்' தாம் இறக்கும்வரை இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக கவிதை, சிறுகதை, கட்டுரை போன்றவற்றைப் படைப்பதில் சிறந்து விளங்கியிருக்கின்றார்.

எழுத்துலகில் பிரவேசித்த காலப்பகுதியில் அதிகமாக கட்டுரைகளையே எழுதி வந்த இவர், **1956**ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறுகதை, கவிதை எழுதுவதில் ஆர்வம் காட்டினார்.

இவர் எழுதிய பல சிறுகதைகள் வாசகர்களின் மனங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளன. அவற்றில் "தெய்வம் அளித்த பொங்கல் பரிசு", "துர்ப்பாக்கியசாலிகள்", "அப்பாவி மனிதர்", "நம் நாட்டு நோபல்", "காலம் மாறிப்போச்சு", "தகர விளக்கு", "புத்தாண்டுக் கொண்டாட்டம்", "அந்தக் காரணம்" போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

கவியினங்களில் மிகவும் கஷ்டமான "நாக பந்தம்", "தேர்ப் பந்தம்", "சக்கர பந்தம்", "நீரோட்டம்" போன்ற சித்திரக் கவிதைகளைத் தேர்ந்தெடுத்து சர்வசாதாரணமாகப் படைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலைப் பெற்ற கவிஞராகவும் இவர் திகழ்ந்தார். நாகபந்தக் கவிதையாக்கும் சக்தி, ஆயிரத்தில் ஒரு கவிஞருக்குத்தான் அமையும் என்பது இலக்கிய வரலாற்றின் உண்மை. கவிராயரால் ஆக்கப் பெற்ற 'சக்தி' இரட்டை நாகபந்தக் கவிதை **1971**ல் சுதந்திரன் பத்திரிகையில் வெளியானபோது இலக்கிய ஆய்வாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

எஸ்.எல். சவுந்தரநாயகம், வன்னியூர் நாயகம், மனோகரி, எஸ்.எல். எஸ்., பாவேந்தர் போன்ற பல பெயர்களில் பத்திரிகைகள் பலவற்றிலும் நிறைய எழுதியிருக்கிறாராயினும் கவிதை உலகில்தான் அவரது தனித்திறமை வெளிப்பெற்றது. பிரபல விழாக்கள், வானொலிக் கவியரங்குகள் பலவற்றிலும் கலந்து கொண்டு கவிதை பாடியதன் மூலம் மக்கள் மனதிலே நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டார். ஆயினும் 'வன்னியூர்க் கவிராயர்' என்ற புனைபெயரே அவரது தனித்திறன் வாய்ந்த முத்திரையினை ஆழமாகப் பதியவைத்து அழியுறாத இடத்தைப் பிடித்துக் கொண்டது.

இருபத்தைந்து வருடகால இலக்கிய அறுவடையின் கன்னி முயற்சியாக 'ஈழத்துக் காவிய தீபகம்' என்ற பெயரில் சிறுகதைத் தொகுப்பு நூலொன்றினை **1973**ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

குன்றாத நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் கொண்ட கவிராயர் இலக்கியப் பணியோடு மாத்திரம் நின்று விடாமல் அரசியலிலும் குறிப்பிட்டளவு பணியாற்றியுள்ளார். சின்னச் செட்டிகுளம் கிழக்கு, இலுப்பைக்குளம் வேப்பங்குள வட்டார உறுப்பினராகவும் கி.ச.வின் துணைத் தலைவராகவும் போட்டியின்றி **1966** இல் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் இறுதி நிகழ்ச்சியாக **1978.01.24** இல் கிளிநொச்சியில் நடைபெற்ற 'உழவர் விழாக் கவியரங்கிற்குத் தலைமை தாங்கியது குறிப்பிடத்தக்கது.

**1978.01.29** மாலையில் இவருடைய பேனா எழுத மறந்து போயிற்று.

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவின் இலக்கிய வழிகாட்டி அகளங்கன்



வவுனியாவின் இலக்கிய வழிகாட்டியாகத் திகழும் ஒருவர் 'அகளங்கன்' என்ற புனைபெயருக்குள் புதைந்து கிடக்கும் நாகலிங்கம் தர்மராஜா என்றால் அது மிகையாகாது.

வவுனியா பம்பைமடு நாகலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் புதல்வரான இவர் **1953.12.04** இல் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை பம்பைமடு அ.த.க.பாடசாலையிலும் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்று மேற்படிப்பை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கணித புள்ளிவிபரவியல் பட்டப்படிப்பை யாழ்.பல்கலைக் கழகத்திலும் மேற்கொண்டார்.

கணித ஆசிரியரான இவர் தற்பொழுது வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கடமை புரிந்து வருகின்றார்.

**1970**ம் ஆண்டு **17** வயதில் கவிதை எழுத ஆரம்பித்ததுடன் இலக்கிய உலகில் பிரவேசித்து இன்று வரையிலும் தமிழுக்கும் சமயத்திற்கும் பெருமை தேடித் தந்து கொண்டிருக்கின்றார்.

கவிதை, கட்டுரை, பேச்சு, நாடகம், சிறுகதை, தொடர்சொற்பொழிவுகள், புராணபடலம், வானொலி மெல்லிசைப் பாடல் போன்ற பல துறைகளில் மிளிர்வுடன் வழக்காடு மன்றங்கள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள் பலவற்றுக்கு நடுவராகவும் தலைமை தாங்கியும் வருகின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத் தலைவராகவும் வவுனியா இலக்கிய வட்டத் தலைவராகவும் இருந்த இவர் தற்பொழுது வவுனியாப் பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவராகவும் இருந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று வரையில் இவர் இருபது புத்தகங்களை எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டு வவுனியா மன்னுக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவரினால் இதுவரையில் ஐந்து கவிதை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

1977இல் தந்தை செல்வாவின் மறைவினை ஒட்டி" 'செல்' 'வா' என்று ஆணையிடாய்" என்னும் அஞ்சலிக் கவிதைகள் நூல் யாழ்ப்பாணத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

1982இல் "சேரர் வழியில் வீரர் காவியம்" என்னும் குறுங்காவியம் வவுனியாவில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

நுவரெலியாவில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலமான 1985இல் "சமவெளி மலைகள்" என்னும் கவிதை நூல் நுவரெலியாவில் மலையகக் கவிஞர் சு.முரளிதரனுடன் இணைந்து செய்யப்பட்டது. 1993ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற மாவட்ட சாகித்திய விழாவில் "தென்றலும் தெம்மாங்கும்" என்னும் கவிதை நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. 1996ஆம் ஆண்டு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் முத்தமிழ்க் கலாமன்ற வெளியீடாக "அகளங்கன் கவிதைகள்" நூல் வெளியானது.

இவருடைய பாராட்டைப் பெற்ற இரண்டு கட்டுரை நூல்கள் வெளியானது. "இலக்கியத் தேறல்" என்னும் நூல் 1988இலும் அதனைத் தொடர்ந்து 1992இல் "இலக்கியச் சிமிழ்" என்னும் நூல் இரண்டு பதிப்புக்களாகவும் வெளிவந்தன.

அகளங்கன் ஆக்க இலக்கியம் மாத்திரமல்ல பல ஆய்வு நூல்களையும் படைத்துள்ளார். இவருடைய "வாலி" எனும் நூல் 1987இலும் 1989இலுமாக இரண்டு பதிப்புகள் வெளியாகியுள்ளன.

இந்தியாவிலே 1994ஆம் ஆண்டு "மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்"எனும் நூல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. 1995ம் ஆண்டிலே இதன் அறிமுகவிழா வவுனியா கல்வியியல் கல்லூரியிலே இடம் பெற்றது.

இவர் வானொலிக்கெனவும், மேடைக்கெனவும் பல சமூக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய நாடகங்களை எழுதி எல்லோரது மனங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார். இவர் எழுதி வானொலியில் ஒலிபரப்பப்பட்ட சமூக நாடகங்களின் தொகுப்பானது "அன்றில் பறவைகள்" என்ற பெயரிலே **1992**ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது மட்டுமல்லாமல் அவ்வாண்டிலே இலங்கையிலே வெளியான நாடக நூல்களில் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டு தேசிய சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக்கொண்டது.

**1994** ஆம் அண்டு "இலக்கிய நாடகங்கள்" எனும் நூல் வெளிவந்து அவ்வாண்டிலேயே வெளிவந்த சிறந்த நாடக நூலாகத் தெரிவு செய்யப்பட்டு வடக்கு – கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும், கொழும்புத்தமிழ்ச் சங்கத்தின் பரிசினையும் தட்டிக் கொண்டது

மாணவர்களின் மொழிஇலக்கிய ஆற்றலை விருத்தி செய்வதற்காக இவர் எழுதிய "செந்தமிழும் நாப் பழக்கம்" என்ற நூல் **1997**இல் வெளிவந்தது.

இவரினால் இந்து சமய வளர்ச்சிக்கென பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. வவுனியா இந்து மாமன்றத்தின் வெளியீடாக "பன்னிரு திருமுறைகள் அறிமுகம்" என்னும் நூல் **1994**ல் வெளிவந்தது.

இவர் மாணவர்களுக்கென பல நூல்களை எழுதியுள்ளார். அவையாவன, **1989**இல் வெளியான "நளவெண்பா" (கதை), **1992**இல் வெளியான "முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்", **1995**இல் வெளியான "ஆத்திசூடி"(விளக்கவுரை), **1996**இல் வெளியான "கொன்றை வேந்தன்" (விளக்கவுரை)1997ல் வெளியான நாமறிந்த நாவலர் "வாக்குண்டாம்" (விளக்கவுரை), "சிவபுராணம்" (பொருளுரை) என்பனவாகும்.

இவருடைய இலக்கியச் சேவையின் மூலம் சர்வதேச ரீதியிலும் அகில இலங்கை ரீதியிலும் வவுனியா பல பரிசில்களைப் பெற்றுப் பெருமையடைகிறது. இவருடைய "மீண்டும் ஒரு குருசேத்திரம்" என்ற சிறுகதை யாழ்ப்பாணம் ஈழமுரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையினால் 1985இல் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட பொன்விழா சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசிசைப் பெற்றுக்கொண்டது. 1992இல் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட நாடகப் பிரதியாக்கப் போட்டியில் "உருகி எரியும் கற்பூரங்கள்" எனும் நாடகம் முதலாம் பரிசு பெற்றது.

"வாலி" என்ற ஆய்வு நூல் 1987இல் வெளிவந்த சிறந்த இலக்கிய நூலுக்கான பாராட்டை அகில இலங்கை இலக்கியப் பேரவையும், யாழ் இலக்கிய வட்டமும் வழங்கின. இந் நூலானது கலைப்பட்டப் படிப்பு முதல் தேர்வில் தமிழ்ப் பாடத்திற்குத் துணை நூலாக பயன்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இது இரு பதிப்புகள் கண்டது. 1995இல் மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம் நடாத்திய அமரர்.ரி.பாக்கியநாயகம் நினைவு நகைச்சுவைக் கட்டுரைப் போட்டியில் "தமிழ் இலக்கியத்தில் நகைச்சுவை" எனும் கட்டுரை முதலாம் பரிசைப் பெற்றது.

1996இல் மாத்தறை மக்கள் சமாதான இலக்கிய அமைப்பு நடாத்திய கவிதைப் போட்டியில் "ஒற்றுமைப்பாட்டு" என்னும் கவிதை சிறப்புப் பரிசைப் பெற்றது.

1996இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப் பெற்ற நாவற்குழியூர் நடராஜன் நினைவுக் கவிதைப் போட்டியில் இவருடைய கவிதை 2ஆம் பரிசைப் பெற்றுக் கொண்டது.

1995இல் கலாசார அமைச்சு நடாத்திய தேசிய ரீதியிலான சிறுகதைப் போட்டியில் "யாழ்தேவி" சிறுகதை இரண்டாம் இடம் பெற்றது.

1996இல் கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் இவருடைய "மகாகவி பாரதியார் காட்டும் வாழ்வியல் முறை" என்னும் கட்டுரை முதலாம் பரிசைப் பெற்றது.

1996இல் ஆசிரியர் தினத்தையொட்டி அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் இவரது "துருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரம்" சிறுகதை சிறப்புப் பரிசு பெற்றது.

1997இலும் இப்போட்டியில் இவரது "மனித தெய்வங்கள்" சிறுகதை சிறப்புப்பரிசுபெற்றது.

உலகத் தமிழ்க் கவிதைத் தொகுப்பான "செம்மாங்கனியில்" இவரது கவிதை இடம் பெற்றது.

இவர் பெற்ற பட்டங்களும் பாராட்டுக்களும் ஏராளம்.

வவுனியா இந்துமாமன்றம் 1990இல் "காவியமாமணி" என்னும் பட்டத்தை வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

1993இல் இந்து கலாசார இராஜாங்க அமைச்சு,"தமிழ்மணி" பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

1995இல் யாழ் திருநெறிய தமிழிசைச் சங்கமும் வவுனியா இந்து மாமன்றமும் இணைந்து "திருநெறிய தமிழ் வேந்தர்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

1997ல் யாழ். மெய்கண்டார் ஆதீனம் "கவிமாமணி" பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

வடக்கு-கிழக்கு மாகாணசபை 1991இல் நடாத்திய முதலாவது சாகித்திய விழாவில், இலக்கிய சேவையைப் பாராட்டி கௌரவித்தது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், 'தமிழ் மணி' ப் பட்டம் பெற்றமைக்காகத் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தது. மேலும், தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றமைக்காகவும், 1994இல் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. அத்துடன், 1995இல் வவுனியா நகரசபையும்'தமிழ் மணி'ப் பட்டம் பெற்றமைக்காகவும் தேசிய சாகித்திய மண்டலப் பரிசு பெற்றமைக்காகவும் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கி கௌரவித்தது.இவரது இலக்கியப் பணிக்காக இவரது பிறந்த ஊரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பைமடுவும், வவுனியா வைரவர்புளியங்குளம் கிராமோதய சபையும், இந்துமாமன்றமும், பரிசு வழங்கிப் பாராட்டி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தன.

இவருடைய நாடகங்கள் பல அவுஸ்ரேலிய வானொலியில் ஒலிபரப்பாகி வருவதுடன் சுவிச்சலாந்து, கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளில் மேடையேறி வருகின்றன.

அன்றில் பறவைகள் நூலில் இடம் பெற்ற "உருகி எரியும் கற்பூரங்கள்" என்னும் நாடகம் வவுனியா ஆங்கிலக் கல்வி ஆலோசகர் திரு. சு. பூபாலசிங்கம் அவர்களால் 'MELTING CAMPHORS' என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு மேடை பல கண்டது.

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பல கவியரங்குகளிலும் பங்குகொண்ட இவர் வானொலியில் பல பேச்சுக்களையாற்றியதுடன் 38 வாரங்கள் வானொலியில் "கவிதைக் கலசம்" என்னும் நிகழ்ச்சியை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. ரூபவாகினியில் 1993ஆம் ஆண்டு "வந்தது வசந்தம்" என்ற விபரணச் சித்திரத்திலும் நடித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண கலாசாரக் குழு உறுப்பினராகவும், வடக்கு-கிழக்கு மாகாண சாகித்திய மண்டலக்குழு உறுப்பினராகவும், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் குழு உறுப்பினராகவும் தற்பொழுது இருந்து வருகின்றார்.

1996ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய தமிழ்ச் சங்கம் சர்வதேச ரீதியாக நடாத்திய கவிதைப் போட்டியில்"சிந்தனை செய் தமிழா" என்ற இவருடைய கவிதை இரண்டாம் பரிசு பெற்றது.

வவுனியா மாவட்டத்திற்கு வெளியே மலையகம், கொழும்பு, நீர்கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல சொற்பொழிவுகளையும் கவியரங்குத் தலைமையையும் நிகழ்த்தியுள்ளார்.

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "என்றும் எப்போதும் தில்லை"



அந்தக் கிராமத்தின் பெயர் உடுப்பிட்டி. அங்கே ஒரு சாதாரண குடும்பத்தில் 1947இல் பிறந்தார் உடுவை எஸ்.தில்லை நடராஜா.

தந்தை -சிங்காரம் பிள்ளை; தாய்- இராஜாம்பாள்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி பயின்றார். யாழ் இந்துக் கல்லூரியில் உயர்தரம் பயிலும் பொழுது கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் எழுதுவினைஞராக உத்தியோகம் கிடைத்தது. அப்போது வயது பத்தொன்பது.

கொழும்பு, நுவரெலியா, கல்கிசை, வவுனியா, யாழ்ப்பாணம் என உத்தியோகம் பார்க்கும் பொழுது இலங்கை நிர்வாக சேவை நியமனம் கிடைத்தது.அப்போது வயது முப்பத்தொன்று.

நிர்வாக சேவையிலும் மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை என வேறு வேறு மாவட்டங்களில் வேறு வேறு பதவிகளைச் சுமந்து தற்பொழுது கிளிநொச்சியில் அரச அதிபர் பதவி வகிக்கின்றார்.

பாடசாலை நாட்களிலிருந்தே கொஞ்சம் கொஞ்சமாக பத்திரிகைகளுக்கும் வானொலிக்கும் எழுதத் தொடங்கினார்.

பதினைந்து வயதில் படிக்கும் காலத்தில் 'மாணவன்' என்ற சஞ்சிகையை அச்சிட்டு வெளியிட்டார்.

உடுவைக்கு மூன்று வேறு வேறு காலப்பகுதிகளில் வேறு வேறு கடமைகளைச் செய்யும் வாய்ப்பு வவுனியாவில் கிடைத்தது.

**1973-75** காலப்பகுதியில் வவுனியா பொலிஸ் அலுவலகத்தில் கடமையாற்றியபோது நூற்றுக்கும் அதிகமான மேடை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியது பசுமையான புதுமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்கள். 'தம்பி கண்டியில', சோ. இராமேஸ்வரனின் 'ஓ!யோஜனா' நாடக நாயகனாக மாறியதும் அந்த நாட்களில் வரணியூரான், அண்ணேரைட் பாலச்சந்திரன் நட்பினால் நாடக மேடைகளில் தோன்றியதும் வானொலியிலும் அடிக்கடி குரல் கொடுத்ததும் நினைவில் நிற்கிறது. அவருடைய 'அசட்டு மாப்பிள்ளை', 'தலையணை மந்திரம்' ஆகிய நாடகங்களே மற்றவற்றைவிட அதிக புகழைத் தேடிக் கொடுத்தன.

**1983 - 88** காலப்பகுதி வவுனியா கூட்டுறவு உதவி ஆணையாளர். பலரை இலக்கியத்தில் ஈடுபட ஊக்குவித்த காலப்பகுதி.

**1992 -94** வவுனியா அரசாங்க அதிபர். இவருடைய 'நிர்வாணம்' சிறுகதைத் தொகுதி தமிழ மத்திய மகா வித்தியாலயத்தில் அறிமுகமானது. இது **1992**இல் நடந்தது. இந்நூல் அவ்வாண்டடில் தமிழில் வெளிவந்த தரமான சிறுகதைத் தொகுப்புக்கான தமிழகம் 'லில்லி தேவசிகாமணி நினைவுப் பரிசு' பெற்றது. பின்பு 'நிர்வாணம்' சிறுகதைத் தொகுதி 'தெமல கெட்டிகத்தாவ' என்னும் பெயரில் சிங்கள மொழி பெயர்ப்பில் வெளியானது.

இவருடைய 'மந்திரக் கண்ணாடி', 'கடற்கன்னி' ஆகிய சிறுவர் கதைகளை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி தனது கேட்போர் கூட நிதிதிரட்டலுக்காக **1994**இல் நூலாக வெளியிட்டு கௌரவம் தந்தது.

இவருடைய இலக்கிய சேவையைப் பாராட்டி **1993**ல் இந்து கலாசார இராஜாங்க அமைச்சு 'தமிழ்மணி' பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

பட்டம் கிடைத்ததையிட்டு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் தங்கப் பதக்கம் அணிவித்தும், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தன.

பதவிகள் பெருத்தாலும் பட்டங்கள் கிடைத்தாலும் இலக்கிய நண்பர்கள் அவரை 'தில்லை' என்றே அழைப்பர். அவரும் என்றும் எப்போதும் 'தில்லை' என அழைப்பதையே விரும்புவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச பத்திரிகையாளர் மாணிக்கவாசகம்



வவுனியாவில் 25 வருடங்களுக்கு மேலாக இலக்கிய வளர்ச்சிப் பணியாற்றி வருபவர்களில் ஒருவர்தான் பொன்னையா மாணிக்கவாசகம்.

ஹொலிருட் தலவாக்கொல்லையில் 01.04.1946இல் ஜனனித்த இவர் தலவாக்கொல்லை சென்.பற்றிக்ஸ், ஹட்டன் டொண்.பொஸ்கோஸ் கல்லூரிகளின் பழைய மாணவன்.

ஆரம்ப காலத்தில் பெருந்தோட்டத்துறையில் பணியாற்றிய பின்பு 70களில் மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட அரசியல் நிலைமைகள் காரணமாக சுதந்திரமான தொழிலையும் வாழ்க்கையையும் தேடி வவுனியாவுக்கு குடும்பத்தினரோடு இடம் பெயர்ந்து வந்து வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். முழுநேர விவசாயியாக ஆரம்பித்த வவுனியா வாழ்க்கை 1978 இல் பத்திரிகைத்துறையில் இணைந்து ஏழு வருடங்களில் முழுநேரப் பத்திரிகை வாழ்க்கையாக மாறியது.

1970களின் பிற்பகுதியில் அகளங்கன், மு.சிவலிங்கம் (இப்போதைய நவமணி பத்திரிகையின் செய்தி ஆசிரியர்) ஆகிய இலக்கியவாதிகளின் தொடர்புடன் வவுனியா இலக்கிய வட்டத்தை ஆரம்பித்தார்.

சில ஆண்டுகளில் இலக்கிய வட்டம் செயலிழந்து போக வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம் உதயமாகியது. இதன் செயலாளராக செயலாற்றி வருகின்றார்.

பின்னர் 1995இல் அமைக்கப்பட்ட வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையின் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

சிறுகதை, நாவல்களில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த இவரது 'கரைசேராத ஓடங்கள்' என்ற சிறுகதை1981ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திரன் சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றுப் பிரசுரமாகியது.

'மாணிக்கம்' என்ற மாதாந்தச் சஞ்சிகை நடாத்திய குறுநாவல் போட்டியில் 1977ஆம் ஆண்டில் இடம் பெற்ற பொதுத் தேர்தலையடுத்து நிகழ்ந்த வன்முறைகளில் வவுனியாவின் நிலைமைகளை மையமாக வைத்து எழுதிய 'இருளில் இரு வாரங்கள்' என்ற குறுநாவல் ஆறுதல் பரிசினைப் பெற்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சமகால அரசியல் ஆய்வுக் கட்டுரைகளை வரைவதற்கு நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் அவசியம். அவற்றை ஒருங்கே கொண்டு தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர்.

இவருடைய அரசியல் கட்டுரைகள் ஈழத்தில் மாத்திரமல்ல, உலகம் முழுவதும் வாழும் தமிழர்களால் ஆவலுடன் வாசிக்கப்படுபவையாகும்.

வீகேசரி பத்திரிகையின் வவுனியா நிருபரான இவர் வாராந்தம் வீரகேசரி வார வெளியீட்டில் நிகழ்காலம் சம்பந்தமான கட்டுரைகளை தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வருகின்றார்.

நீண்டகாலம் எழுத்துத்துறையில் ஈடுபட்டுவரும் இவர் தற்பொழுது லண்டன் பி.பி.சி. யின் தமிழோசையின் நிருபராகவும் சேவை புரிகின்றார்.

இவரினால் சமகால நிகழ்வுகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட "நம்பிக்கையோடு நிம்மதியை நாடும் யாழ்ப்பாணம்" என்னும் விபரண நூல் 1995இல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு முதல் வவுனியாவில் நடைபெறுகின்ற சகல இலக்கிய வளர்ச்சியிலும் தன்னை முழுமையாக இணைத்துச் செயல்படுவதனையும் சிறந்த ஒரு சர்வதேச பத்திரிகையாளர் என்பதனையும் பாராட்டி, வவுனியா நகரசபை 1996ஆம் ஆண்டு பரிசு வழங்கிக் கௌரவித்தது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் ச. அருளானந்தம்



சண்முகம் அருளானந்தம் திருமலை மண்ணின் ஆலங்கேணியில் பிறந்தார். இலக்கிய வளர்ச்சியில் வவுனியா மண்ணில் காலைப் பதித்தவர்.

ஆலங்கேணிப் பாடசாலை, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பழைய மாணவன்.

ஆசிரியர்-அதிபர்-வட்டாரக் கல்வி அதிகாரி என உயர்ந்து வவுனியாக் கோட்டத்தின் கோட்டக் கல்வி அதிகாரியாகச் சேவை செய்து, தற்பொழுது வடக்குக் கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகராகக் கடமை புரிந்து வருகின்றார்.

ஆலன், கேணிப்பித்தன் ஆகிய புனைபெயர்களில் சுதந்திரன், தினகரன், தினபதி, சிந்தாமணி, கேணிச்சுடர், வெற்றிமணி, குமரன், ஈழமணி, தினமுரசு பத்திரிகைகளில் ஆக்கங்களைப் படைத்தவர்.

கவிதை, சிறுகதை, நாடகப் போட்டிகளில் பல பரிசில்கள் பெற்றவர்

வவுனியாவில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் வவுனியாவின் இலக்கிய வளர்ச்சிப் பங்களிப்பில் இவர் ஆற்றிய பணி அளப்பரியது.

வவுனியா முத்தமிழ்க் கலாமன்றத்தை வளர்த்தெடுத்த பெருமை இவரையே சாரும். அதற்கு அவரே தலைவர். இம் மன்றத்தின் மூலம் 90 வரையிலும் மாதம் ஒரு கலைவிழா, கவிதை அரங்கு, பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள் நடாத்தியமை மறக்க முடியாத நிகழ்வுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90களில் இவர் மூலம் ஆரம்பிக்கப்பட்ட வன்னி இலக்கியக் கலாமன்றமானது வீறுடன் இலக்கிய நடை போட்டது. ஞாயிறு தோறும் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இளம் எழுத்தாளர் அறிமுகம் - மாதம் ஒரு கலைவிழா-கையெழுத்துப் பத்திரிகை போன்றவற்றை நடாத்தியது.

பல மேடைகளில் கவியரங்குகளில் கவிஞனாக, தலைமைக் கவிஞனாகத் தோன்றிய இவர், ஒரு சிறந்த சிறுவர் பாடல்களை எழுதும் கவிஞரும்கூட. இவருடைய சிறுவர் பாடல்களில் நல்ல கருத்துக்களும் படிப்பினைகளும் பொதிந்து கிடக்கும்.

இவர் வவுனியாவில் வாழும் காலத்தில் இரண்டு சிறுவர் பாடல் நூல்களைத் தந்துள்ளார். 1990இல் 'இன்பக் கனிகள்' என்னும் நூலும் 1992இல் 'பாட்டுப் பாடுவோம்' என்னும் நூலும் வெளிவந்தன.

1996இல் இவருடைய "காகமும் தம்பியும்" எனும் சிறுவர் பாடல் நூலும் திருகோணமலையில் வெளியிடப்பட்டது குறிப்பிடப்பாலது.

இவருடைய இன்னுமொரு சிறுவர் நூலான 'பாடி ஆடுவோம்' என்னும் நூல் வவுனியாவில் வெளியிட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

இவையெல்லாவற்றையும் விட இவருடைய பெயர் நிலைத்து நிற்கக் கூடிய ஆக்கம் வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தின விழா மலர்களான சுவைத்தேன்(1994), பார்த்தேன்(1995) மலைத்தேன்(1996) களாகும்.


வவுனியா மாவட்டத்தில் 54 புதிய பாடசாலைகளை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்து கல்வி வளர்ச்சியிலும் பெரிதும் உதவியுள்ளார்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர் "ஓ.கே."



இவர் ஓ.கே.குணநாதன். மட்டக்களப்பு அமிர்தகழிமண் பெற்றெடுத்த மைந்தன். **14.11.1960**இல் பிறந்தவர். இயற்பெயர் கணபதிப்பிள்ளை குணநாதன்.

மட்டக்களப்பு அமிர்தகழி மகா வித்தியாலயம், இந்துக்கல்லூரி, சிவானந்த வித்தியாலயம் இவர் கற்ற கல்வியகங்கள்.

நீர் விவசாய டிப்புளோமா **(AQUA CULTURE)** பயின்று, றெட்பானா நிறுவனம் - நோர்வே **(REDD-BARNA)**, ஹற்றன் நஷனல் வங்கி, சண்டே ரைம்ஸ் **(SUNDAY TIMES)** நிறுவனம் ஆகியவற்றில் பணிபுரிந்து தற்பொழுது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா பிரதேச இளைஞர் சேவை அதிகாரியாகச் சேவை புரிந்து வருகின்றார்.

ஆக்க இலக்கியப் பணியில் ஈடுபட்டு வரும் இவர் **1976**ஆம் ஆண்டு வானொலியில் "அவளின் பாதையில் அவன் ஒரு.." என்ற இசையும் கதையும் மூலம் இலக்கிய உலகில் காலடியெடுத்து வைத்து இதுவரை ஏராளமான சிறுகதைகள், நகைச்சுவைக் கட்டுரைகள், சிறுவர் கதைகள், கட்டுரைகள், நாவல்கள் என்பனவற்றைத் தொடர்ந்து படைத்துக் கொண்டிருக்கின்றார்.

இவரின் **'விடிவைத் தேடி'** என்ற நாவல் **1990**இல் யாழ்ப்பாணத்தில் **மீரா வெளியீடாக** வெளிவந்துள்ளது. **1992**இல் "ஊமை நெஞ்சின் சொந்தம்" என்ற நாவலானது கொழும்பில் அமைச்சர் பி.பி.தேவராஜ் அவர்களினால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் 1993ஆம் ஆண்டு கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.நவரட்ணராஜா அவர்கள் தலைமையில் 'நகைச்சுவைக் கதைகள்' நூல் வெளியிடப்பட்டது.1995இல் வவுனியா நகரசபை மண்டபத்தில் "வீரஆனந்தன்-சுதந்திரம்" என்னும் இரணைச் சிறுவர் குறுநாவல் நூல் வெளியிடப்பட்டது. இந் நூலானது 1995இல் வெளியான சிறந்த சிறுவர் இலக்கிய நூலுக்கான வடக்கு- கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக் கொண்டது. அதனைத் தொடர்ந்து 1996இல் 'மாயக் கிழவி' என்னும் சிறுவர் குறுநாவல் வவுனியா நகரசபை மண்டபத்தில் வெளியானது.

அமிர்தகழி சனசமூக மன்றத்தின் தலைவராகவும், அமிர்தகழி இளைஞர் கழக ஆலோசகராகவும் இருந்த இவர் 1995ஆம் ஆண்டு முதல் வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையின் செயலாளராகவும், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் நூல் வெளியீட்டுத் தெரிவுக் குழுவின் உறுப்பினராகவும் இருந்து வருகின்றார்.

ஓ.கே.குணநாதன் எழுதிய ஆக்க இலக்கியங்களுக்கு அகில இலங்கை ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பல பரிசுகள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1996ஆம் ஆண்டு இந்தியாவில் "தேவியின் கண்மணி" சஞ்சிகை சர்வதேச ரீதியில் நடாத்திய நாவல் போட்டியில் "ஒரு துளி..." என்ற நாவற் பிரதிக்குச் சிறப்புப் பரிசு.

1995இல் வெளியான நூல்களிலே "சுதந்திரம்-வீர ஆனந்தன்" இரணைச் சிறுவர் நூலுக்கு வடக்கு-கிழக்கு மாகாண சிறுவர் இலக்கியத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1990**ஆம் ஆண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிறுவர் இலக்கியத்திற்கான ஜனாதிபதியின் இளைஞர் விருது.

**1994**ஆம் ஆண்டு கனேடிய கிறிஸ்தவ குழந்தைகள் நிதியமும் சர்வோதயமும் இணைந்து நடாத்திய "எயிட்சும் இளைஞனும்" கட்டுரைப் போட்டியில் முதலாமிடம்.

**1989**ஆம் ஆண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் "இதுதான் வாழ்க்கை" சிறுகதைக்கு இரண்டாமிடம்.

**1995**ம் ஆண்டு மக்கள் சமாதான சாகித்திய அமைப்பு நடாத்திய சிறுகதைப் போட்டியில் "நிகழ்கால நிதானங்கள்" சிறுகதைக்கு இரண்டாமிடம்.

**1988**ஆம் ஆண்டு தொடுவானம் சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் "உண்மைகள் சுடுவதில்லை" சிறுகதைக்கு மூன்றாமிடம்.

**1996**ஆம் ஆண்டு கலாசார அமைச்சு நடாத்திய சிறுகதைப் போட்டியில் "நிதானங்கள்"சிறுகதைக்கு மூன்றாமிடம்.

**1991**ஆம் ஆண்டு மித்திரன் வாரமலர் நடாத்திய சிறுகதைப் போட்டியில் "வாழ்வின் அர்த்தங்கள்" சிறுகதைக்கு சிறப்புப் பரிசு.

**1996**இல் கலாசார அமைச்சு நடாத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றதனைக் கௌரவித்து வவுனியா பிரதேச கலாசார விழா – **1996**இன் போது தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் "தேவியின் கண்மணி" சஞ்சிகை சர்வதேச ரீதியில் நடாத்திய நாவல் போட்டியில் "ஒரு துளி...." என்ற நாவலுக்குச் சிறப்புப் பரிசு கிடைத்ததனைப் பாராட்டி வவுனியா நகரசபை 1997 சித்திரைப் பௌர்ணமி விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. அத்துடன் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் 28.09.97இல் தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவித்தது.

இவர் மலர்க்குழு ஆசிரியராகச் செயற்பட்டுத் தயாரித்த வவுனியா பிரதேச இலக்கிய விழா 95 இன் "கலை மருதம்" மலரும் வடக்கு–கிழக்கு மாகாண இலக்கிய விழா 96இன்"மருதநிலா" மலரும் இலங்கையில் வெளியான மலர்களுள் சிறந்த மலர்களாக கணிக்கப்படுகின்றன.

இவர் இலக்கியவாதி மட்டுமல்ல. சிறந்த விளையாட்டு வீரரும்கூட. அகில இலங்கை ரீதியிலான கபடி போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் வவுனியா உக்குளான்குளம் சீர்சிருத்த இளைஞர் கழக கபடி அணியின் பயிற்றுனராக இருந்து அகில இலங்கை ரீதியிலான கபடி போட்டியில் 1994ஆம் ஆண்டு வெள்ளிப் பதக்கத்தினையும் 1995ஆம் ஆண்டு தங்கப் பதக்கத்தினையும், 1997ஆம் ஆண்டு வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுக் கொடுத்து வவுனியா மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவருடைய இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்பவர்கள் அமரர் ரீ.பாக்கியநாயகம், அன்புமணி, அகளங்கன், உடுவை எஸ்.தில்லை நடராஜா, பி. மாணிக்கவாசகம் ஆகியோர் என்பதனை நினைவு கூருவதில் பெருமையடைகின்றார்.

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுக் கூத்துக் கலைஞர் அருணா செல்லத்துரை



முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்டு வவுனியாவில் வசித்துவரும் இவர், முள்ளியவளை சைவப்பாடசாலை, வற்றாப்பளை ரோமன் கத்தோலிக்க பாடசாலை, வித்தியானந்தாக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றவர். 1980க்குப் பின்னர் முள்ளியவளை இயல் இசை நாடகக் கலாமன்றம், பாரதி இளைஞர் இலக்கிய மன்றம் போன்றவற்றில் பொறுப்பான பதவிகளை வகித்து பல மேடை நாடகங்களை எழுதியும் தயாரித்தும் நடித்தும் இயக்கியும் அனுபவம் பெற்றவர்.

1970ல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சி உதவித் தயாரிப்பாளராகச் சேர்ந்து நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றவர். வானொலியில் நாடகங்கள், உரைச்சித்திரங்கள், விளம்பர நிகழ்ச்சிகள் போன்றவற்றை எழுதியும் தயாரித்துமுள்ளார். கடந்த 26 வருடங்களாக வானொலி நடிகனாகவும், பகுதி நேர அறிவிப்பாளராகவும் தொலைக்காட்சி செய்தி அறிவிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். 1974இல் இலங்கைக் கலைக்கழகம் நடாத்திய நாடகப் போட்டியில் முல்லைத்தீவுப் பிரதேச மரபுவழி வட்டக்களரி நாட்டுக்கூத்தான 'கோவலன் கூத்தை' மேடைக்காகத் தயாரித்து, மேடையேற்றி முதற் பரிசைப் பெற்று கலாநிதி சு.வித்தியானந்தனின் பாராட்டைப் பெற்றவர்.

1981ல் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புப் பயிற்சிக்காக மேற்கு ஜேர்மனி சென்று பயிற்சி பெற்றவர். பின்னர் 1984இல் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தொலைக்காட்சி செய்திப் பரிவர்த்தனை பற்றி பயிற்சி பெற்றவர். தொலைக்காட்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆயகலைகள்' என்ற நிகழ்ச்சியை ஆரம்பித்து பல நுண்கலைகளைத் தொலைக்காட்சி நிகழ்ச்சியாகத் தயாரித்தவர்.

'ஒளித்தென்றல்' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியைத் தொடங்கி பல மெல்லிசைக் கலைஞர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்தவர். இந்த நிகழ்ச்சிக்கென 56 மெல்லிசைப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து அவற்றை தொலைக்காட்சிப் பாடல்களாக நெறிப்படுத்தியவர். அத்துடன் தொலைக்காட்சியில் 'உதயகீதம்' மெல்லிசைக் கலைஞர் அறிமுக நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தவர்.

சிறுகதைகள், மற்றும் வானொலி தொலைக்காட்சி போன்றவற்றிற்கு பல மெல்லிசைப் பாடல்களும் எழுதியுள்ளார். இவர் 'திருப்பங்கள்' என்ற தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்து தொலைக்காட்சி நாடக வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியவர்.

'வீடு' என்ற மூன்று அங்கங்களைக் கொண்ட நாடகத்தினை எழுதி கலையகத்தில் தயாரித்து நெறிப்படுத்தியவர். தொலைக்காட்சித்துறையில் புதிதாக பிரவேசிப்பவர்களுக்கு உதவும் வகையில் அந்த சாதனம் தொடர்பாக கட்டாயமாக அறிந்திருக்க வேண்டிய பிரதி தயாரிப்பு, தயாரிப்பு நுட்பங்கள் போன்றவை பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில் 'வீடு' **1993.07.25**இல் வவுனியா மாவட்ட சாகித்திய விழாவில் வெளியிட்டவர். இந்த நூல் **1993**ஆம் ஆண்டு ஈழத்தில் வெளி வந்த ஆக்கவிலக்கியங்களில் நாடகம் சார்ந்த சிறந்த நூல்களில் ஒன்றாக யாழ் இலக்கிய வட்டத்தின் இலங்கை இலக்கியப் பேரவையின் இலக்கியச் சான்றிதழ் பெற்றதாகும்.

இலங்கையின் வன்னி வள நாட்டிலே மங்கி மறையும் புராண சரித்திரங்கள் பல உண்டு. அவற்றில் ஒன்றான வேலப்பணிக்கன் ஒப்பாரியில் இருந்து நாட்டுக்கூத்து வடிவமாக்கப்பட்ட வேழம் படுத்த வீராங்கனை என்ற நாட்டுக்கூத்தை கொழும்பு இராமநாதன் இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் பாடசாலை மாணவிகளுக்குப் பழக்கி மேடையேற்றி பல பரிசில்களைப் பெறச் செய்தவர். பின்னர் 1993ஆம் ஆண்டு நடைபெற்ற வவுனியா மாவட்ட தமிழ் சாகித்திய விழாவில் மேடையேற்றியவர். பின்னர் கொழும்பில் நடைபெற்ற சாகித்திய விழாவின் இறுதி நிகழ்ச்சியாக மேடையேற்றி அறிஞர்கள் பலரின் பாராட்டைப் பெற்றவர்.

இதன் பின்னர் இந்த முல்லைமோடி நாட்டுக்கூத்தை 1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வவுனியாவில் ஒளிப்பேழையாக வெளியிட்டார். இதன் மூலம் இலங்கையின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் முதலாவது நாட்டுக்கூத்து ஒளிப்பேழை என்ற பெருமையையும் 'வேழம்படுத்த வீராங்கனை' பெற்றுக் கொண்டது.

1995ல் அவரால் எழுதப்பட்ட மெல்லிசைப் பாடல்கள் நூலும், பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழையும் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்தப் பாடல்கள் அனைத்தும் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஒலிப்பதிவாகி மெல்லிசைப் பாடல்களாக ஒலி, ஒளிபரப்பாகியவை என்பது குறிப்பிடத்தக்கது. வானொலிக்காட்சி மெல்லிசைப் பாடல்கள் வரிசையில் நூலுருப்பெற்ற முதலாவது வெளியீடு என்ற பெருமையை 'அருணா செல்லத்துரையின் மெல்லிசைப் பாடல்கள் என்ற நூல் பெற்றுக் கொள்கின்றது அதே போல மெல்லிசைப் பாடல்கள் அடங்கிய முதலாவது ஒலிப்பேழையை 'ஒலித் தென்றல் – 1' என்ற பெயரில் வெளியிட்ட பெருமையும் அருணா செல்லத்துரை அவர்களையே சாரும்.

கொழும்பு அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடம் 1992ஆம் ஆண்டு அதி உத்தம முன்னாள் ஜனாதிபதி மாண்புமிகு ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்கள் மூலம் "கலா விநோதன்" என்னும் சிறப்புப் பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது

1993ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற வவுனியா மாவட்ட தமிழ் சாகித்திய விழாவில் இந்துசமய கலாசார இராஜாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் கௌரவ.பி.பி.தேவராஜ் அவர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1994ஆம் ஆண்டு கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய தமிழ்க் கலைவிழாவில் தொடர்பியல் வளர்ச்சிக்கு ஆற்றிய பணியினைப் பாராட்டி "தொடர்பியல் வித்தகர்" எனும் பட்டம் வழங்கப்பட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1996ஆம் ஆண்டு ஒலித் தென்றல் -2 என்ற ஒலிப்பேழையில் மா.சத்தியமூர்த்தி அவர்கள் பாடிய மெல்லிசைப் பாடல்களை வெளியிட்டுள்ளார்.

1997ஆம் ஆண்டு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இவர் எழுதிய "நந்தியுடையார்" என்ற நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இந் நூலுக்கு 1996ஆம் ஆண்டு வெளியான நாடக நூ ல்களிலே சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டு தேசிய சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "எழுதோ எழுது என எழுதிக் கொண்டிருக்கும் செங்கை ஆழியான்"



வவுனியாவின் இலக்கியத்திற்கும் செங்கை ஆழியானுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆனால் அவரை நேரடியாகத் தொடர்பு கொண்டு நீண்ட தகவல்களைத் தர முடியவில்லை. ஆனாலும்......

யாழ்ப்பாணக் கச்சேரியின் மேலதிக அரசாங்க அதிபராகக் கடமைபுரியும் கலாநிதி கந்தையா குணராசா "செங்கை ஆழியான்" என்ற புனைபெயரில் இதுவரை ஈழத்திலிருந்து 43க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவராகின்றார்.

**1941.01.25** இல் யாழ்ப்பாணம நீராவியடியில் பிறந்து **1959**இல் எழுத்துலகில் பிரவேசித்தவர். இவர் வவுனியா வெங்கலச் செட்டிகுளப் பிரதேசத்தில் வவுனியா மாவட்ட இறைவரி உத்தியோகஸ்தராகப் பணி புரிந்த காலத்தில் "வாடைக்காற்று" என்னும் வீரகேசரி வெளியீடான நாவல் செட்டிகுளத்தில் வெளியிடப்பட்டது. பின்னர் இந் நாவலானது "வாடைக்காற்று"என்னும் திரைப்படமாக்கப்பட்ட பெருமையைப் பெறுகின்றது. இவரினால் வன்னியைப் பின்னணியாகக் கொண்ட பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

செட்டிகுளப் பிரதேசத்தின் பார்வையையும், வளத்தையும், சுரண்டலையும் கூறும் நாவலாக வந்தது "காட்டாறு". இது இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு, இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசு என்பனவற்றைப் பெற்றுக் கொண்டது.

பழைய முருகண்டிக் கிராமப் பின்னணியையும் சமூகப் பண்பாட்டினையும் பேசும் நாவலாக வெளியிடப்பட்டது "கனவுகள் கற்பனைகள் ஆசைகள்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையின் தடப்பாதையையும் விலங்குக்கும் மனிதனுக்கும் இடையிலான போராட்டத்தைச் சித்தரிக்கும் நாவலாக பரிணமித்தது "யானை". பின்னர் இது **'THE BEAST'** என ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. முருகண்டி – கிளிநொச்சி இரணை மடுக்குளத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் "மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து....". இந் நாவலுக்கு தேசிய சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது.

கிளிநொச்சி-கண்டாவளையைப் பின்னணியாகக் கொண்டு வரையப்பட்ட நாவல் "மண்ணின் தாகம்".

பழைய முருகண்டியைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் "ஓ! அந்த அழகிய பழைய உலகம்".

காட்டுமாங்குள மூன்று சமூக மக்களது பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்பட்டது "ஒரு மைய வட்டங்கள்" நாவல்.

இவற்றினை விட இவர் வெளியிட்ட நூல்களும், பெற்ற பரிசில்களும், கௌரவங்களும் ஏராளம். அவையாவன, நந்திக்கடல், ஆச்சி பயணம் போகிறாள், அக்கினிக் குஞ்சு, தீம் தரிகிடத்தோம், இரவின் முடிவு, பிரளயம் (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது), கங்கைக்கரையோரம், அலைகடல்தான் ஓயாதா? சித்திரா பௌர்ணமி, முற்றத்து ஒற்றைப் பனை, இதயமே அமைதி கொள், நடந்தாய் வாழி வழுக்கியாறு, 24 மணி நேரம், 12மணி நேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, மழைக்காலம், அக்கினி(இலங்கை இலக்கியப் பேரவை பரிசு பெற்றது), கந்தவேள் கோட்டம் (கொழும்பு தமிழ்ச் சங்கப் பரிசு பெற்றது), ஜன்ம பூமி, யாக குண்டம், ஆறுகால் மடம், செங்கைஆழியான் நாவல்கள், கிடுகு வேலி, (தகவம் பரிசுபெற்றது) கொத்தியின் காதல், செங்கை ஆழியான் கதைகள், காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள், கடல் கோட்டை(கொழும்பு தமிழ்ச் சங்கப் பரிசு பெற்றது), நல்லைநகர் நூல், குவேனி, (சாகித்திய மண்டலப் பரிசு) யாழ்ப்பாணத்து இராத்திரிகள் (தமிழ்நாடு லில்லி தேவசிகாமணி நினைவுப் பரிசிலும், இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசிலும், வடக்கு-கிழக்கு மாகாண சாகித்தியப் பரிசிலும் பெற்றது), காவோலை, இரவு நேரப் பயணிகள் (தேசிய சாகித்திய மண்டலப்பரிசு பெற்றது), யாழ்ப்பாணத்துக் கோட்டை வரலாறு, ஈழத்தவர் வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நூல்களுக்கு ஓர் தேவேந்திரன்



**1951.06.21**இல் ஏழாலையில் பிறந்து, வவுனியா இறம்பைக்குளத்தில் வசித்துவரும் தம்பையா மரியாம்பிள்ளை தேவேந்திரன் நாடறிந்த விளையாட்டுத்துறை சார்ந்த நூல்களை எழுதும் விற்பன்னர்.

தற்பொழுது வவுனியா கல்வியியல் கல்லூரியில் உடற்கல்வி விரிவுரையாளராகக் கடமை புரியும் இவர் விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல, இலக்கியத்துறையிலும் கூடிய ஈடுபாடுடையவர்.

'கவரிமான்' என்ற புனைபெயருக்குள் புகுந்து கொண்டு அரசியல் கட்டுரைகளையும் 'ஜெயா' என்ற பெயரில் சிறுகதைகளையும் "சுதேசி", "இந்து" ஆகிய புனைபெயரில் கவிதைகளையும் சுதந்திரன், மாணிக்கம், வீரகேசரி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளில் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய ஐந்து சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு நூல் **"எங்களுக்கும் காலம் வரும்"** என்ற பெயரில் **1974**ஆம் ஆண்டு கோவை மகேசன் அவர்களால் கொழும்பில் வெளியிடப்பட்டது.

தமிழ் மக்களின் அன்று இன்று நாளைய நிலைகளை இடித்துக் காட்டும் நோக்குடன் எழுதப்பட்ட "தமிழர் திரும்பிப்பார்" என்னும் நூல் வட்டுக்கோட்டை மகாநாட்டிலே வெளியிடப்பட்டது.

**1977** ஆம் ஆண்டு ஜுலை இனக்கலவரத்தின் அவலங்களை மையமாக வைத்து எழுதிய **"தீ 77"** என்ற நூலானது யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய விளையாட்டுத்துறை சார்ந்த நூல் "ஓடி விளையாடு பாப்பா-பாகம்1" 1993இல் வவுனியாவில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இது வவுனியா மாவட்ட சாகித்திய விழாவின் போது இராஜாங்க அமைச்சர்களான பி.பி.தேவராஜ், திருமதி.ஆர்.புலேந்திரன் என்பவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவரின் 'வொலிவோல்' என்னும் நூல் வவுனியா பிரதேச செயலாளராக இருந்த சொ.அமிர்தலிங்கம் அவர்களினால் 1994இல் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

1995இல் "ஓடி விளையாடு பாப்பா-11" வவுனியா கல்வியியல் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

1997இன் ஆரம்பத்தில் இவரினால் மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் பற்றி எழுதப்பட்ட "மெய்வல்லுனர் விளையாட்டுக்கள்" என்னும் நூலானது சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

உடற்கல்வி விரிவுரையாளரான இவர் வவுனியாவின் விளையாட்டுத்துறையை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

இவர் விளையாட்டுக்கள் தொடர்பான விசேட பயிற்சியொன்றிற்காக அண்மையில் மணிலா-பிலிப்பைன்ஸ் சென்று வந்துள்ளார்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய ஆய்வாளர் இரவீந்திரன்



அண்மைக் காலமாக வவுனியாவின் கலை-இலக்கிய நிகழ்வுகளில் பங்கு கொண்டு தனது முழுமையான பங்களிப்பையாற்றி வருபவர் நடேசன் இரவீந்திரன்.

பண்டத்தரிப்பில் 20.04.1955இல் பிறந்து தற்பொழுது வவுனியா குருமன்காட்டில் வாழ்ந்துவரும் இவர் காலையடி அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலை, சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற பட்டதாரி ஆவார்.

ஆசிரிய சேவையில் 15 வருடங்களைக் கழித்து இப்போது 5வருட காலமாக வவுனியா கல்வியியல் கல்லூரில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

இலக்கிய ஆர்வலரும் படைப்பாளியும் சிறந்த இலக்கிய ஆய்வாளருமான இவர் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தையும் தேசிய கலை இலக்கியப் பேரவையையும் உருவாக்கினார்.

இவர் எழுதிய "பாரதியின் மெய்ஞ்ஞானம்" ஆய்வும் "ஏன்" சிறுகதைத் தொகுதியும் நூலுருவம் பெற்றுள்ளன.

இவரினால் படைக்கப்பட்ட "பின் நவீனத்துவமும் அழகியலும்" என்ற நூலானது வவுனியா கலை – இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் வவுனியாவில் 1997இன் இறுதியில் வெளியிடப்பட்டது.

சமூக –அரசியல்–இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ள இவர் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைமைச் செயலாளராகவும், வவுனியா கலை –இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் அமைப்பாளர்களில் ஒருவராகவும் 'தாயகம்' சஞ்சிகையில் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் நிர்வாகக்குழு ஆசிரியராகவும், தேசிய சாகித்திய மண்டலக்குழு உறுப்பினராகவும் இருந்து கொண்டு இலக்கிய சேவையாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய விமர்சகர் ஸ்ரீகணேசன்



யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டு வவுனியா இறம்பைக்குளத்தில் வசித்துவரும் கந்தையா ஸ்ரீகணேசன் நாடகம், கவிதை, சிறுகதை, விமர்சனம் ஆகிய துறைகளில் பதினைந்து வருட காலமாக ஈடுபட்டு வருகின்றார்.

இவர் இணுவில் கலை இலக்கிய இளைஞர் வட்டச் செயலாளராகவும், வவுனியா கலை–இலக்கிய நண்பர்கள் வட்ட அங்கத்தவராகவும் இருக்கின்றார்.

இவர் எழுதிய சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் மல்லிகை, சுபமங்களா, நாடகவெளி, அமிர்தகங்கை ஆகிய சஞ்சிகைகளிலும் முரசொலி, வீரகேசரி, ஈழமுரசு, திசை, சரிநிகர் போன்ற பத்திரிகைகளிலும் வெளியாகின.

இவர் ஒரு ஆக்க இலக்கியம் படைப்பவர் என்பதனைவிட 'நாடகத்துறை' என்ற வகையிலேயே தன்னை இனங்காட்டி நிற்கின்றார். இதனால் 1996ஆம் ஆண்டு வவுனியா நகரசபை 'நெறியெழில்' என்னும கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

தற்பொழுது யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்றும் இவரின் முதலாவது நாடகமான 'உறுதி' பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மேடையேறியது.

தொடர்ந்து 'ஒருபிடிமண்', 'என்ன செய்யலாம்', 'கவிஞன்', 'உயிர்களின் அவலக்குரல்', 'சர்வதேச அடிமைகள்', என்னும் நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்துள்ளார்.

இவர் எழுதிய "யாழ்ப்பாண தமிழ் நாடக அரங்கு – விமர்சனக் கட்டுரைகள்" என்னும் நூல் வவுனியா கலை–இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் வெளியீடாக 1997 மார்கழியில் நகரசபை மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியெழில் கவிஞர் கண்ணையா



முனுசாமி இராமையா என்றால் யாருக்கும் தெரியாது. ஆனால் வவுனியாவில் கவிஞர் கண்ணையா என்றால் தெரியாதவர்கள் இல்லை.

1942.10.20இல் மாந்தையில் பிறந்த கண்ணையா வவுனியா தாண்டிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்திலும், சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் கல்வி பயின்று, வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளராகத் தொழில் புரிகின்றார்.

1962இல் கவிதை எழுத ஆரம்பித்த இவர் இன்று வரை எழுதிக் கொண்டேயிருக்கின்றார்.

கவிதை மட்டுமல்ல பல கட்டுரைகளையும், நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நாடகங்களுள் "ஒன்று பட்ட உள்ளங்கள்", "அபூர்வ சகோதரர்கள்", "புரோக்கர் நல்லையா" என்பன குறிப்பிடுச் சொல்லக்கூடியவை.

1986ஆம் ஆண்டு சர்வதேச சமாதான ஆண்டை முன்னிட்டு பீக்கிங் வானொலியின் தமிழ்ப் பிரிவு நடாத்திய கட்டுரைப் போட்டியில் இவர் எழுதிய "நானும் சமாதானமும்" என்ற கட்டுரை முதலாமிடத்தைப் பெற்றது.

1995ஆம் ஆண்டு மாத்தறை மக்கள் சமாதான அமைப்பு நடாத்திய கவிதைப் போட்டியிலே "சமாதானம் அணுகுவோம்" என்ற கவிதைக்கு பரிசு கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேடியோ வெரித்தாஸ் இற்கு 100க்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பு 1993ஆம் ஆண்டு "கவிதைப் பூக்கள்" என்ற பெயரில் மலர்ந்துள்ளது. இது ஒரு வவுனியா முத்தமிழ் கலாமன்ற வெளியீடாகும்.

1995ஆம் ஆண்டு வவுனியா நகரசபை இவரைப் பாராட்டி 'கவியெழில்' என்ற பட்டத்தை வழங்கியது.

இவர் எழுதிய "தனி மூலிகையின் மருத்துவ சாதனை" என்ற வைத்திய நூல் 1997இல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

வவுனியாவில் பல கவியரங்குகளிலும் பங்கு கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவின் முதல் நாவல் வெளியிட்ட பெருமைக்குரிய யாமினி சிவராமலிங்கம்



வவுனியாவின் குடியிருப்பில் பிறந்து-வளர்ந்து வவுனியாவிலிருந்து முதல் நாவலை வெளியிட்ட பெருமையைத் தனதாக்கிக் கொண்டவர் யாமினி.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வியைக் கற்று வெளியேறிய கையுடனே வவுனியா பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் இலிகிதராக இணைந்து கொண்டார்.

**1983**ஆம் ஆண்டு எழுத்துலகில் பிரவேசித்த இவர் இதுவரை **10** சிறுகதைகளையும் **35** கவிதைகளையும் **4** நாவல்களையும் எழுதியுள்ளார்.

இவரினால் எழுதப்பட்ட "நிலவே நீ மயங்காதே" என்னும் நாவல் **1990**ஆம் ஆண்டு மீரா வெளியீடாக நூலுருப் பெற்றது. இதுவே வவுனியாவில் வெளிவந்த நூலுருப் பெற்ற முதலாவது நாவல் என்பதும் வவுனியாவில் முதலாவது பெண் படைப்பாளியினால் படைக்கப்பட்ட நாவல் என்ற பெருமையையும் பெறுகிறது. இந்நாவலை 'இந்திரா பிரியதர்ஷினி' என்ற புனை பெயரிலேயே எழுதியுள்ளார்.

இவருடைய அநேகமான கவிதைகள் 'நான்' சஞ்சிகையிலும், வெரித்தாஸ் தமிழ்ப் பணியிலும் வெளியாகியுள்ளன.

இவர் **1995**ஆம் ஆண்டு பிரதேச இலக்கிய விழாக்களையொட்டி கலாசாரத் திணைக்களம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய நாவல் போட்டியில் முதலாம் பரிசினைப் பெற்றுத்தந்து வவுனியா மண்ணுக்குப் பெருமை சேர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவத் தமிழ்ப் பழம்
## சைவப்புலவர் வித்துவான் வ.செல்லையா



சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றும் அறிஞர்கள் பலர். அவர்களுள் தமது சேவையின் பரிமாணங்களால் மக்களுலகில் பெயர் பெற்றவர்களாகச் சிலரே வெளித் தெரிகின்றனர்.

தனது 76வது வயதிலும் சைவத்திற்கும் தமிழுக்கும் பணிபுரிந்து வருபவர்தான் சைவப்புலவர் வ.செல்லையா.

சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரியராகவும் அதிபராகவும் 30 ஆண்டுகள் பணி புரிந்து தற்பொழுது வவுனியாவில் வசித்து வருகின்றார்.

1953ஆம் ஆண்டு சைவப்புலவர் பரீட்சையில் தேறிய இவர் 1960ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

சைவத்திற்கும், தமிழுக்கும் பணி புரிய வேண்டி பத்துக்கும் மேற்பட்ட சங்கங்களை ஆரம்பித்து சேவையாற்றினார். குறிப்பாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தில் பதின்மூன்று ஆண்டுகள் தலைவராக இருந்து பல புலவர்களை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

இவர் 1965ஆம் ஆண்டு தமிழ்நாடு சிதம்பரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டில் கலந்து கொண்டதுடன், 1966ஆம் ஆண்டு மலாயா கோலாலம்பூரிலும், 1968ஆம் ஆண்டு சென்னையிலும்,

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971ஆம் ஆண்டு இலங்கையிலும் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

இவர் இலங்கை வானொலியில் 1950 ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சமயவகுப்பு, சைவ நற்சிந்தனை, சமயப் பேச்சுக்களை நிகழ்த்தினார். இவருக்கு 1975இல் மெய்கண்டர் ஆதீனம் 'சைவப்புலவர் மணி' பட்டத்தையும் 1994இல் இந்து சமய கலாசார திணைக்களம் 'ஞானசிரோன்மணி' பட்டத்தையும் 1996இல் வவுனியா குருமண்காடு காளியம்பாள் தேவஸ்தானம் 'வித்தியாபூசணம்' பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது.

1975ஆம் ஆண்டு எழுத்துலகில் பிரவேசித்த இவர் இதுவரை 12 சமய நூல்களையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1975இல் 'திருமணம்' என்ற நூலும், 1979 டிசம்பரில் நாவலர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மலாயாவில் 'நால்வர் நெறியில் நாவலர்' என்ற நூலும், 1989இல் கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்தில் யோகர் சுவாமியைப் பற்றிய 'கருணைமழை பொழிந்த வள்ளல்' என்ற நூலும், 1992இல் சித்திரமேழி வைரவ கோயிலில் 'வைரவர் போற்றித் திரு அகவல்' என்ற நூலும், 1992இல் பெரியவிளான் பிள்ளையார் கோயிலில் 'விநாயகர் போற்றித் திரு அகவல்' என்ற நூலும், 1993இல் சுதுமலை அம்மன் கோயிலில் 'சுதுமலை புவனேஸ்வரி அம்மன் போற்றித் திரு அகவல்' என்ற நூலும், 1992இல் கொழும்பு இந்துக் கல்லூரியின் வெளியீடாக 'சைவ நீதிக் கதைகள்' என்ற நூலும், 1993இல் மானிப்பாய் வேலக்கற் பிள்ளையார் கோயிலில் 'இறைநாம அர்ச்சனை' என்ற நூலும், 1955இல் வேம்படி காளியம்பாள் ஆலயத்தில் "ஜோதி வேம்படி காளியம்மாள் திரு அகவல் என்ற நூலும், 1995ஆம் ஆண்டு டிசம்பரில் வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்குளம் மஹாவிஷ்ணு ஆலயத்தில் மனோரா வெளியீடாக மஹாவிஷ்ணு போற்றித் திரு அகவல் என்ற நூலும், **1996**ஏப்ரல் வவுனியா குருமண்காடு காளியம்பாள் தேவஸ்தானத்தில் 'பஞ்சதோத்திரப் பாமாலை திரு அகவல் என்ற நூலும் வெளியீடு செய்யப்பட்டுள்ளன.

இவரை பல நூல்கள் எழுதியமைக்காக பாராட்டி **1995**ஆம் ஆண்டு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு 'அருள்நெறி' விழாவில் **5000/-** ரூபா அன்பளிப்புச் செய்து கௌரவித்தது.

இறுதியாக **1997**இல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் இவருடைய 'செயா உலக நீதிக் கதைகள்' என்னும் சிறுவர் கதைக்ள அடங்கிய நூல் வெளியிடப்பட்டது.

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வண்ண மலர்கள்' ந.கிருஷ்ணராசா



வன்னிப் பெருநில முல்லைத்தீவிலே 1947.05.13இல் ஜனனித்த நடராசா கிருஷ்ணராசா, யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயின்று தற்பொழுது வவுனியா இறம்பைக் குளத்தில் வாழ்ந்து வருகின்றார்.

கலைப்பட்டதாரியான இவர் வவுனியா கோமரசங்குளம் மகாவித்தியாலயத்தில் கணித ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

இலக்கியப் படைப்புக்கள் எந்த வேளையிலும் வரும் என்பதற்கு ஒப்ப, 1995ஆம் ஆண்டே இலக்கியம் படைக்க ஆரம்பித்தார்.

இவர் மரபுக் கவிதைகளை எழுதியுள்ளபோதிலும், சிறுவர் பாடல்கள் மூலமே எழுத்தாளனாகத் தன்னை அடையாளங் காட்டி நிற்கின்றார். இவரினால் எழுதப்பட்ட 10 சிறுவர் பாடல்கள் அடங்கிய தொகுப்பு 'வண்ண மலர்கள்' என்ற பெயரில் சி.வரதராஜன் அவர்களால் வவுனியாவில் 1995ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை எழுத்தாளர் அன்ரனி மனோகரன்



வவுனியா இறம்பைக்குளத்தைச் சேர்ந்த அன்ரனி மனோகரன் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியலாளர். தற்பொழுது இங்கினிமிற்றிய என்னுமிடத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளராகப் பணி புரிகின்றார்.

1977ஆம் ஆண்டு 'புதிய உலகம்' சஞ்சிகை மூலம் சிறுகதை உலகிற்கு அறிமுகமானவர். இதுவரை பல சிறுகதைகள் எழுதியும் பரிசும் பெற்றுள்ளார்.

இவருடைய சிறுகதைகள் சுடர், ஈழநாடு, புதிய உலகம், ஆகிய சஞ்சிகையில் பிரசுரமாகியுள்ளன. இவர் 'வன்னிராஜ்' என்ற புனைபெயரிலும் எழுதியுள்ளார்.

இவரின் 'பிடிவாதக்காரன்'(ஈழநாடு) என்னும் சிறுகதை 'தகவம்' நிறுவனத்தின் 1979ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிற்கான சிறுகதை மதிப்பீட்டில் முதலாமிடம் பெற்றது.

'சாய்ந்த கோபுரங்கள் நிமிர்கின்றன' என்னும் சிறுகதை சுடரில் பரிசுக் கதையாகப் பிரசுரமானது.

நீர்ப்பாசனத் திணைக்கள தமிழ்ப் பண்பாட்டுக் கழக வெள்ளி விழா தொடர்பான சிறுகதைப் போட்டியில் 'மழைத்தூறல்கள்' என்னும் சிறுகதை முதலாமிடம் பெற்றது.

'விடிவெள்ளி' கே.பி.முத்தையா நினைவாக யாழ்.மாவட்ட சனசமூகங்களின் ஒன்றியம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய சிறுகதைப் போட்டியில் 'பொழுது வெளுத்தது' சிறுகதை முதலாம் பரிசு பெற்றது.

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத் திணைக்கள தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் 'இரும்பு ஏணிகள்' மூன்றாமிடமாகவும் "ஏற்றாத ஏணிகள்" சிறுகதை சிறந்த சிறுகதையாகவும் தெரிவு செய்யப்பட்டன.

1982 பங்குனி மாத சுடரில் இவரின் "விஷப் பாம்புகள்" சிறுகதை பிரசுரமானது.

இப்படியாகப் பல சிறந்த சிறுகதைகளைப் படைத்து வந்த அன்ரனி மனோகரன் ஏனோ இன்று எழுதுவதைக் குறைத்துக் கொண்டார்.

இவரது ஆக்கங்கள் எதுவும் நூலுருப்பெற வில்லை என்பது வேதனைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளங்கவிஞர் எஸ்.அப்துல் சமட்



வவுனியாவின் பட்டாணிச்சூரைச் சேர்ந்த எஸ்.அப்துல் சமட் 17.12.1958இல் பிறந்தவர். இவர் ஒரு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டதாரியாவார்.

வவுனியா வள்ளுவர் கலை–இலக்கியக் கழகத்தின் தலைவராக இருந்த இவர் சிறந்த பேச்சாளர். பேச்சுத் துறையிலே அகில இலங்கை ரீதியிலான போட்டிகளிலே பத்துக்கும் மேற்பட்ட பரிசில்களை வென்றவர்.

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகத் தொழில் புரியும் இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வன்னியின் குரல் வானொலி சேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகக் கடமை புரிந்தார்.

வவுனியாவில் நடைபெறும் கவியரங்குகளிலும் பட்டிமன்றங்களிலும் கலந்து கொள்ளுபவர்.

இவர் எழுதிய கன்னிக் கவிதை சிந்தாமணி பத்திரிகையில் "எனக்குரியது" என்னும் தலைப்பில் பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து கவிதையில் கால் பதிக்க தமிழ்மணி அகளங்கன் அவர்களின் வழிகாட்டலும் முத்தமிழ்க் கலாமன்றம் ஏற்படுத்திய களமும் ஊன்றுகோலாய் அமைந்தன என்கிறார்.

1986இல் அகில இலங்கை ரீதியில் சிரித்திரன் சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய "கிழக்கே போகும் விமானங்கள்" என்னும் சிறுகதை முதற் பரிசைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகள் நிறுவனம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய அணிசேராமை கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றுள்ளார்.

மாத்தறை மக்கள் சமாதான அமைப்பு நடாத்திய கவிதைப் போட்டியில் இவருடைய 'இன ஐக்கியம்' எனும் கவிதை சிறப்புப் பரிசினைப் பெற்றது.

இவர் எழுதிய "வாழ்க்கை அமைவதெல்லாம்" என்னும நாடகம் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பானது.

இவருடைய இலக்கிய பணியைப் பாராட்டி வவுனியா மாவட்ட சாகித்திய விழாவில் இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ பி.பி.தேவராஜ் அவர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். வவுனியா நகரசபை "கவியெழில்" பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

வவுனியா வைரவர்புளியங்குளம் கிராம அபிவிருத்தி சங்கமும், வவுனியாக் கிராமோதய சபையும் இணைந்து 1992ல் இவரைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்க் கௌர வித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம் பெயர்ந்து இலக்கியம் படைக்கும் வவனியூர் இரா உதயணன்



ஐரோப்பிய நாடொன்றிலே 'வவனியூர்' என்ற ஊர்ப்பெயரை ஒலிக்கச் செய்து வவுனியாவுக்குப் பெருமை தேடித்தரும் ஒரு எழுத்தாளர் வவனியூர் இரா உதயணன்.

வவுனியாவின் நகரின் அருகிலே அமைந்திருக்கும் குடியிருப்பில் பிறந்து வளர்ந்த இரா உதயணனின் தந்தையின் பெயர் ஸ்ரீஇராமகிருஷ்ணன்.

ஆரம்பக் கல்வியை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலும் கற்று, மேற்படிப்புக்காக லண்டன் சென்று, அங்கு ஸ்கொட்லாந்து டன்டீ **(UNIVERSITY OF DUNDEE)** பல்கலைக்கழகத்தில் **(MACC)** முது கணக்கியல் மாணிப்பட்டம் பெற்றுக் கொண்ட இரா உதயணன், அதனைத் தொடர்ந்து வேல்ஸ் பல்கலைக் கழகத்தில் **(UNIVERSITY OF WALES, U.K )** முது முகாமைத்துவ மாணிப் பட்டத்தையும் **(MBA)**பெற்றுக்கொண்டார். தற்பொழுது லண்டனிலே நிதிப்பணிப்பாளர் **(FINANCIAL DIRECTOR)**வேலை செய்து கொண்டு மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் **(UNIVERSITY OF MIDDLESEX)**கலாநிதிப் பட்டத்திற்காக முகாமைத்துவத்துறையில் தனது ஆய்வை நடாத்திக் கொண்டிருக்கிறார்.

சிறந்த ஒரு இலக்கியப் படைப்பாளியான இவர் இலக்கிய உலகில் சிறுகதை, நாவல் படைப்பாளியாக தன்னை அடையாளங்காட்டி நிற்பதனை அவருடைய படைப்புகளிலிருந்து இனங்காண முடிகின்றது.

வவுனியாவில் வாழ்ந்த எண்பதுகளில் எழுத்துலகில் 'பிரவேசித்த இவர், 1985ஆம் ஆண்டு ஈழத்து தினகரன் பத்திரிகையில் தொடராக "ஒரு அத்தியாயம் முடிவடைகிறது" என்ற நாவலை எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களின் பாராட்டைப் பெற்றார். 1986இல் அதே பத்திரிகையில் "இடைவெளிகள்" என்றதொரு சமூக நாவலைத் தொடராகப் படைத்துச் சிறந்த நாவலாசிரியர் என்ற முத்திரையைக் குத்திக் கொண்டார்.

அத்துடன் வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் பல சிறுகதைகளையும படைத்துக் கொண்டிருந்த இவர் மேற்படிப்புக்காக இலண்டன் பயணமானார். அங்கும் அவருடைய இலக்கியப் பயணம் தொடர்ந்தது ஐரோப்பிய நாடுகளில் பிரசுரமாகும் ஈழநாடு, தமிழன், ஈழகேசரி பத்திரிகைகளில் சிறுகதைகள், நாவல்கள் எழுதினார்.

தமிழன் பத்திரிகையில் 1978இல் "ஒரு வேங்கை இரை தேடுகிறது" என்ற நாவலும் 1992/1993இல் "உதட்டுப் பூச்சுக்கள்" என்ற நாவலும் பிரசுரமாகின.

புலம்பெயர்ந்த தமிழர்களின் ஐரோப்பிய நாட்டு வாழ்க்கை முறையையும் அழிந்து போகும் பண்பாடுகளையும் கலாசார முறைகளையும் வைத்து எழுதப்பட்ட "உதட்டுப் பூச்சுக்கள்" என்ற நாவல் உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இவர் புலம் பெயர்ந்த பின்பும் பல சிறுகதைகளை எழுதியிருக்கின்றபோதிலும், உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இவரினால் எழுதப்பட்ட "அப்பா எப்போ வருவார் அம்மா" என்ற சிறுகதை வாசகர்களிடம் வரவேற்பைப் பெற்றது.

உலகெல்லாம் வலம்வர இலக்கியம் படைத்து வவுனியாவுக்கு பெருமை தேடித்தந்து கொண்டிருக்கும் இவர் தற்பொழுது இங்கிலாந்திலுள்ள வவுனியா - முல்லைத்தீவு மாவட்ட பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக இருக்கின்றார்.

இவரது நாவல்களும், சிறுகதைகளின் தொகுப்பும் நூலாக வெளிவரவிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென்மையான எழுத்துக்களால் வன்மையான கதை படைக்கும் பெண் எழுத்தாளர் த.நிறைமதி



வவுனியாவின் கோயில்புதுக்குளத்தைச் சேர்ந்த திருமதி த.நிறைமதி பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பின் 'பட்டதாரி' ஆவார்.

தான் கல்வி கற்ற கோயில்புதுக்குளம் இந்துக் கல்லூரியிலேயே ஆசிரியையாகக் கடமையாற்றும் இவர், தொழில் புரிந்து கொண்டே தேசிய கல்வி நிறுவனத்தில் கல்விமாணியின் இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கின்றார்.

வளர்ந்துவரும் எழுத்தாளர்களிலே பெயர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நிறைமதி இதுவரை 40ற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளதோடு, வவுனியா பிரதேசங்களின் பல பகுதிகளில் இடம்பெற்ற இருபதுக்கு மேற்பட்ட கவியரங்குகளில் கவிதை பாடியுள்ளார்.

இவருடைய சிறுகதையின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் உதயம் சஞ்சிகையில் வெளியான 'புரிந்துணர்வு' சிறுகதையும் 1995ஆம் ஆண்டு வவுனியா பிரதேச இலக்கிய விழா மலர் "கலை மருதத்தில்" இடம் பெற்ற 'மனைவி – மனுஷி' சிறுகதையையும் சுட்டிக் காட்டலாம்.

1984ஆம் ஆண்டு சர்வோதய நிறுவனம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய 'சமாதானம்' பற்றிய கட்டுரைப் போட்டியில் முதலாமிடம் பெற்றுக் கொண்டார்.

வளர்ந்துவரும் இவருடைய கவித்திறனைப் பாராட்டி வவுனியா நகரசபை 'கவியெழில்' பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி மூலம் அறிமுகமான சிறுகதைப் படைப்பாளி திருமதி. விஜயலக்ஷ்மி இராஜமனோகரன்



பத்திரிகையில் சஞ்சிகையில் இலக்கியம் படைத்து இலக்கிய உலகில் கால் பதித்தவர்கள்தான் அநேகம். ஆனால் அவற்றிலிருந்து மாறுபட்டு வானொலியில் 'செவி' மூலம் சிறுகதையைப் புகுத்தி சிறுகதையில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர் திருமதி. விஜயலக்ஷ்மி இராஜமனோகரன்.

வவுனியா மண்ணின் கோயில்புதுக்குளத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட இவர் ஆரம்பக் கல்வியை தற்பொழுது வவுனியா இந்துக் கல்லூரியாகத் திகழும் கோயில்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்று, உயர் கல்வியை இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் மேற்கொண்டார்.

சித்திரத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் தற்பொழுது வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் ஓவியக்கலை ஆசிரியராகப் பணிபுரிகின்றார்.

1980ஆம் ஆண்டு வானொலியின் ஒலி மஞ்சரியில் "கண்ணீர் வாழ்த்துக்கள்" என்ற சிறுகதை மூலம் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்தார்.

இவர் எழுதிய இக்கதை வானொலி நேயரிடையே பாராட்டுப் பெற்றதைத் தொடர்ந்து வானொலி "இசையும் கதையும்" நிகழ்ச்சிக்கென 13க்கும் மேற்பட்ட "இசையும் கதையும்" கதைகள் எழுதினார். அவை ஒவ்வொன்றும் நேயரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. அவற்றில் "அந்த இதயம் அழுகிறது" "புதிய பக்கம் புரட்டப்படுகிறது" ஆகிய இரண்டு கதைகளையும் சிறந்த கதைகளாகச் சுட்டிக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வானொலிக்கு மாத்திரம் எழுதாமல் ஈழத்துப்பத்திரிகைகள் சஞ்சிகைகளான உதயன், வீரகேசரி, சிந்தாமணி, மித்திரன் ஆகியவற்றில் 20க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.

கனடாவில் வெளிவரும் "தமிழ்ஏடு" பத்திரிகையிலும் பல சிறுகதைகளையும் படைத்திருக்கின்றார். அதில் பிரசுரமான சிறுகதைகளில் "புதிய வேடங்கள்" என்ற சிறுகதையைப் பெயர் குறிப்பிட்டுச் சொல்லலாம். இவர் இலக்கியத்திற்காக பல பரிசில்களையும் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1980ஆம் ஆண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அகில இலங்கை ரீதியிலே நடாத்திய சிறுகதைப் போட்டியிலே 3ம் இடம் இவருக்குக் கிடைத்தது.

1983ஆம் ஆண்டு வெரிட்டாஸ் தமிழ்ப்பணி நடாத்திய சமாதானம் பற்றிய கட்டுரைப் போட்டியிலே 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

1984ஆம் ஆண்டு கனடா ஒன்றியம் அகில இலங்கை ரீதியிலே நடாத்திய சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு கிடைத்தது.

இப்படியாகப் பல சிறுகதைகளையும் பரிசில்களையும் பெற்றுக் கொண்ட இவர் தான் சிறுகதை எழுதுவதற்கு தூண்டுதலாக இருந்தவர் பத்திரிகையாளர் திரு. பி.மாணிக்கவாசகம் என்று பெருமையாகக் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான கலை - இலக்கியம் படைக்கும் படைப்பாளி அருட்கலைவாரிதி கலாபூசணம் ஸ்தபதி சு. சண்முகவடிவேல்



1948ஆம் ஆண்டு ஆடி மாதம் 23ந் திகதி வவுனியா மண் பெற்றெடுத்த கலை மைந்தன் சுப்பிரமணியம் சண்முகவடிவேல் ஆவார்.

பரம்பரைச் சிற்பக் கலைஞரான இவர் கலையிலுள்ள நுணுக்கங்களை இந்தியாவில் சென்று பயின்றார். இதன் மூலம் அகில உலகம் புகழும் சிறந்த சிற்பக் கலைஞனாக விளங்குகின்றார்.

இவருடைய கலைப் படைப்புக்களான கருங்கல் விக்கிரகங்கள், கருங்கல் கலைப் பொருட்கள், கொடிமரம், கலசம், வெள்ளி, தங்கக் கிரீடங்கள் போன்றன இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களுக்கும், நோர்வே, டென்மார்க், இந்தியா, கனடா போன்ற நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இவர் 1968முதல் இன்று வரையில் கடந்த 30 வருடங்களாக கலைத்துறைக்கும், சமயத்துறைக்கும் ஆற்றிய அரும்பணிக்காக சுமார் 300க்கும் மேற்பட்ட ஆலயங்களிலும் மன்றங்களிலும் பொன்னாடை போர்த்தியும் பொற்கிழி வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

இவருக்கு 1992.10.21இல் வவுனியா வைரவர்புளியங்குள கிராம அபிவிருத்திச் சங்கமும் வவுனியா கிராமோதயசபையும் இணைந்து பாராட்டு விழா நடாத்தி பரிசளித்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

1993.02.21இல் இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சு நடாத்திய பக்திப் பெருவிழாவில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் முன்னிலையில் அமைச்சர் பி.பி.தேவராஜ் அவர்கள் 'அருட்கலைவாரிதி' என்னும் பட்டம் அளித்து கௌரவப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994.09.19இல் " நகரசபை நடாத்திய மாபெரும் பௌர்ணமிக் கலை விழாவில் வவுனியா நகரசபைத் தலைவர் திரு.ஜீ.ரீ.லிங்கநாதன் அவர்கள் தலைமையில் அரசாங்க அதிபர் திரு.எஸ்.தில்லைநடராசா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

**1994.12.03**.இல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் 42வது ஆண்டு நிறைவு விழாவில் சங்கத்தின் சார்பில் வவுனியாப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. நவரத்தினராசா அவர்கள் பொன்னாடை போர்த்தி பரிசளித்து கௌரவித்தார்.

**1992, 1993,1994,1995**ஆம் ஆண்டுகளில் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் ஆதரவில் தேசிய கைப்பணிச்சபை நடாத்திய கலைப்பொருட்களுக்கான போட்டியிலே இவருடைய கைவண்ணத்தில் உருவான கலைப் பொருட்களுக்கு முதலாம் பரிசுகள் கிடைத்தன.

இவர் ஒரு சிற்பக் கலைஞனாகத் திகழ்கின்ற போதிலும் இவரினால் பல கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

ஆரம்ப காலத்தில் மித்திரன் பத்திரிகையில் சிறுகட்டுரைகள் துணுக்குகளை எழுதியவர், பின்பு வீரகேசரி பத்திரிகையில் 20க்கும் மேற்பட்ட சிற்பக்கட்டுரைகளையும் சமயக் கட்டுரைகயையும் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய கட்டுரைகளிலே 'அணிகலன்கள்', 'படிமங்களின் கண்திறப்பு', 'பந்தனங்கள்', 'சிற்பக் கலைகள்', நடராஜர் வடிவம்', 'நடராஜர் தத்துவங்கள்', 'லிங்கத் தத்துவம்', 'தட்சணா மூர்த்தி', 'கலையாகும் கருங்கல்', போன்றவை குறிப்பிட்டுக் கூறக் கூடியவை ஆகும்.

இவருடைய கலைத்திறமையைப் பாராட்டி கலாசார அமைச்சு 1997 ஆம் ஆண்டு "கலாபூசணம்" பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இதுவரை காலம் இலங்கையில் "கலாபூஷணம்" விருது பெற்றவர்களில் வயதில் இளையவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிசயப் பறவையைத் தந்த அரியாலையூர் சி.சிவதாசன்



யாழ்ப்பாணம் அரியாலை மேற்கு நொத்தாரிஸ் வீதி இலக்கம் 45 என்னும் முகவரியைக் கொண்ட சி.சிவதாசன் பதினைந்து வயதிலிருந்து 'அரியாலையூர் சி.சிவதாசன் என்ற பெயரில் எழுதி வருகின்றார்.

யாழ்ப்பாணம் ஆனந்த வித்தியா சாலையிலும், கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்ற இவர் கவிதைகள், நகைச்சுவைக் கதைகளையே முதலில் எழுதிக் கொண்டிருந்தபோதும் சிறுவர்களுக்கான கதையெழுதுவதையே விருப்பமாகக் கொண்டு செயற்பட்டார்.

அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலைய இளைஞர் கலா மன்றத்தினரால் வெளியிடப்பட்டு வரும் "அறிவொளிக்கலை" என்னும் கையெழுத்து மாத சஞ்சிகையின் வளர்ச்சிக்காக சிறுவர் கதைகளையும் கவிதைகளையும் எழுதி ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்.

இச் சஞ்சிகைக்காக இவர் மாதாந்தம் எழுதிய 'வேப்பமரத்துப் பேய்' என்னும் சிறுவர் நாவல் ஈழமுரசு பத்திரிகையில் வெளிவந்தது. இதனைக் கண்ணுற்ற செங்கை ஆழியான் 1986இல் வரதர் வெளியீடாக நூலுருக்கொண்டு வந்தார்.

விற்பனைத் திணைக்களத்தின் முகாமையாளரான இவர் 1987ஆம் ஆண்டு வவுனியாக்கு இடமாற்றலாகி வந்தார். 1989ஆம் ஆண்டு இத் திணைக்களம் மூடப்பட்டபோது ஓய்வுபெற்று வடக்கு-கிழக்கு மாகாண வர்த்தகத் திணைக்களத்தின் வைத்தியசாலை விநியோகக் கிளையின் முகாமையாளராக தொடர்ந்தும் வவுனியாவில் கடமை புரிந்து வந்தார். இக்காலப் பகுதியான 1995ஆம் ஆண்டு இவர் எழுதிய "அதிசயப் பறவை" என்னும் சிறுவர் நாவல் தொடர்ந்து ஆறு மாதங்கள் (25 வாரங்கள்) வீரகேசரி வார வெளியீட்டில் வெளிவந்தது.

தொடர்ந்தும் சிறுவர்கதைகளை எழுதிக் கொண்டிருக்கும் இவர், தற்பொழுது எழுதிக் கொண்டிருக்கும் அடுத்த கதை "ஆகாயக் கோட்டை" ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சௌமியபுரம் மகேந்திரன்



கொட்டக்கலை இலக்கம் 4, சௌமியபுரத்தில் பிறந்து 1990 இலிருந்து வவுனியா தெற்கிலுப்பைக்குளம்வீதி வெளிக்குளத்தில் நிரந்தரமாக வசித்துவரும் செல்லையா மகேந்திரன் அமைதியாக இருந்து இலக்கியம் படைத்து வருகின்றார்.

தலவாக்கலை சுமண மகாவித்தியாலயம், அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று தற்பொழுது வவுனியா நகரில் வியாபாரம் செய்து வருகின்றார்.

கவிதை எழுதுவதிலும், சிறுகதை எழுதுவதிலும் நாட்டம். கொண்ட இவர் வானொலிக்கெனவும், தினகரன், சிந்தாமணி, பத்திரிகைக்கெனவும் பல கவிதைகளைப் படைத்துள்ளார்.

மலையகத்தில் பல மேடை நாடகங்களில், வீதி நாடகங்களில் பங்கேற்றுள்ளார்.

இவர் எழுதிய புதுக் கவிதையொன்று 'குன்றின் குரல்' சஞ்சிகை 1986இல் அகில இலங்கை ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியில் முதலாமிடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 1986ஆம் ஆண்டு 'யோவுன்புர' இளைஞர் முகாமில் நடாத்திய கவிதைப் போட்டியில் இவரின் கவிதை முதலாமிடம் பெற்றது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்தில் ஒரு குரல் "ஸ்ரீராம் விக்னேஷ்வர்"



தமிழக மண்ணிலேயிருந்து ஒரு குரல்
"தமிழீழ மண்ணிலே விதையை நட்டு தமிழ்நாட்டு
நெல்லையிலே விழுதுவிட்டு கவிதைமரம்
முளைத்ததம்மா - அதிலே தொட்டு இந்தக் -
கவிதாவி வந்ததம்மா அரங்குபட்டு!"
என்று கவியரங்குகளில் தொடங்குகிறது.

அந்தக் குரலுக்குரியவர்தான் வவுனியாவிலே **1959.06.07**இல் பிறந்து நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் வசித்து வரும் இரத்தின விக்னேஷ்வர் என்ற ஸ்ரீராம் விக்னேஷ்வர்.

சென்னை திரைப்படக் கல்லூரியில் **CINEMATO GRAPHY** பயிற்சி **(CAMERA MAN)** பெற்ற இவரின் இலக்கிய உலகப் பிரவேசம் வவுனியா இலக்கிய வட்டம் மூலமே.

இவர் எழுதிய முதல் கவிதை உலகத்தமிழ் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான "செம்மாங்கனி"யில் வந்த "வன்னிநாடு".

அதன் பின்பு "பண்டார வன்னியன்" விழா மலரில் "கனவில் வந்த வன்னியனார்" தலைப்பில் எழுதிய கவிதை.

இதுபோன்று இவர் எழுதிய கவிதைகள் பல.

தமிழகத்தில் "சிறகுப் பேனா" என்ற கையெழுத்துச் சஞ்சிகையை நடாத்தினார். "பாரதி முற்றம்" என்ற அமைப்பை நிறுவி மாதாந்தக் கவிஞர் ஒன்று கூடல்களை நடாத்தி வருகின்றார்.

தமிழகம் எங்கும் கவிதை பாடி வரும் இவருடைய கவித் திறனைப் பாராட்டி **1993**இல் "தமிழரசி" வார இதழ் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

**1995**இல் இவர் எழுதிய "ஒரு அரும்பு கிள்ளப்பட்டபோது..." என்ற சிறுகதை ஆனந்தவிகடன் நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுரை

1975இல் "ஈழத்துப் பாரதியார் கவிதைகள்" என்ற பெயரில் திரு.ம.புவனேந்திரன் என்பவர் ஒரு கவிதை நூலை வெளியிட்டிருந்தார். இருப்பினும் அவர் பற்றியும் அவரின் நூல் பற்றியும் அறிந்து கொள்ள முடியவில்லை. 1970களின் நடுப்பகுதியாக இருக்கலாம் என்ற ஊகத்தில் இது எழுதப்படுகின்றது.

இடம் பெயர்வுகளும், இழப்புகளும் சில தகவல்களைப் பெறமுடியாமற் செய்து விட்டன. குறிப்பாக கவிஞர் திலீபனின் தகவல்களைப் பெற பல தடவைகள் முயன்றும் கைகூடவில்லை இப்படி வேறு நூல்கள்கூட வெளிவந்திருக்கலாம். அவை பற்றிய தகுந்த ஆய்வுகளை இனிவருவோர் செய்வதற்கு இந்நூல் ஒரு அத்திவாரமாக முன்னோடியாக விளங்கினாலே போதும்.

வவுனியாவில் நாவல் படைத்த முதல்ப் பெண் எழுத்தாளர் யாமினி சிவராமலிங்கம் அவர்களே. அவர் பற்றிய விபரங்களை நூலில் பார்த்திருப்பீர்கள்.

வவுனியாவில், படைப்பாளிகளை அவர்களின் சாதனைகளுக்காகப் பாராட்டும் சில நிறுவனங்களையும் இங்கு குறிப்பிடலாம்.

1992 தை மாதத்தில் சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வவுனியா சர்வோதய நிறுவனத்துடன் இணைந்து வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம் சுவாமிகளுக்கு பெருவிழாவெடுத்தது. அவ்விழாவில் பல கலைஞர்களுக்கு பொற்கிழி வழங்கி மாலை சூட்டிக் கௌரவித்தது. இதுவே வவுனியாவில் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட முதற் கௌரவம் எனலாம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா நகரசபை, வவுனியா கூட்டுறவுச் சங்கம், வவுனியா இந்துமா மன்றம், வவுனியா பிரதேசக் கலாசாரப் பேரவை, வள்ளுவர் கலை இலக்கியக் கழகம் முதலியவை, தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் சாதனை படைத்த படைப்பாளிகளைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்து, பரிசு வழங்கி, விருது வழங்கி உற்சாகமூட்டியிருக்கின்றன.

வவுனியா வைரவபுளியங்குளம் கிராமோதைய சபையும் ஒரு தடவை இப் பணியைச் செய்தது.

வவுனியா நகரசபை மாதந்தோறும் நடாத்தி வருகின்ற பௌர்ணமிக் கலை விழாக்களில் இத்தகைய சாதனையாளர்களைக் கௌரவிப்பதையும் ஒரு நிகழ்ச்சியாகக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் நூல் வெளியீட்டுக்குப்பெரும் உதவிகளைச் செய்து வருகின்றது. அதில் முக்கியமானது மண்டபம், ஒலிபெருக்கி முதலான அத்தியாவசிய உதவி எனலாம்.

வவுனியாவில் பெருமளவில் இலக்கிய நூல் வெளியீட்டுத்துறையும், படைப்புத்துறையும் வளர்ச்சி பெறாததற்குரிய பின்னணி முன்னுரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றோடு, வவுனியாவில் சஞ்சிகைகளோ, பத்திரிகைகளோ வெளிவராததையும் சேர்த்துக் கொள்ளலாம்.

1980 களின் ஆரம்பத்தில் கவிஞர் அகளங்கன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு டாக்டர் ஐ. ஞானேஸ்வரன் வெளியிட்ட "அனற்சரம்" என்ற பத்திரிகை ஒரு இதழோடு நின்று விட்டது. அவ்விதழும் வெளியீடு செய்யப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சக வசதி இன்மையும் சஞ்சிகை, பத்திரிகை வெளிவராததற்கான முக்கிய காரணியாகும். சனச்செறிவுக் குறைவும், நகரத்திலிருந்து கிராமங்கள் (குடியிருப்புகள்) நீண்ட தூரத்தில் இருந்ததும்கூட காரணங்களாக்கப்படலாம். இப்பொழுது சஞ்சிகை, பத்திரிகை நடாத்தக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதால் இனி இலக்கியம் வேகமாக வளரும் என எதிர்பார்க்கலாம்.

இருப்பினும், நூல் வெளியீட்டில் பல சாதனைகள் எட்டப்பட்டதையும் பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம். தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் பல பரிசுகளை எமது மாவட்ட நூல்கள் பெற்றுள்ளமை தரமான நூல்கள் வெளிவந்துள்ளமைக்குச் சான்றுகளாகும். தனிப் படைப்புக்கள் சிலவும் தேசிய மட்டத்தையும் கடந்து சர்வதேச மட்டத்தில் பரிசுகள் பெற்றுள்ளன.

தமிழ்மணி உடுவை.எஸ்.தில்லை நடராஜா அவர்களின் "நிர்வாணம்" சிறுகதைத் தொகுதி தமிழகத்தின் லில்லி தேவசிகாமணி நினைவுப் பரிசு பெற்றது. கவிஞர் அகளங்கனின் "சிந்தனை செய் தமிழா" என்ற கவிதை அவுஸ்திரேலிய தமிழ்ச் சங்கத்தின் சர்வதேசக் கவிதைப் போட்டியில் 2ம் பரிசை வென்றது. ஓ.கே.குணநாதன் அவர்களின் "ஒரு துளி" என்ற நாவல் தமிழகத்துத் தேவியின் கண்மணி சஞ்சிகையின் சர்வதேச நாவல்ப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றது.

கவிஞர் அகளங்கனின் "அன்றில் பறவைகள்" நாடக நூலும், அருணா செல்லத்துரையின் "நந்தி உடையார்" நாடக நூலும் தேசிய சாகித்திய மண்டலப் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன.

கவிஞர் அகளங்கனின் "இலக்கிய நாடகங்கள்" என்ற நாடக நூலும் ஓ.கே.குணநாதன் அவர்களின் "சுதந்திரம்-வீர ஆனந்தன்" என்ற சிறுவர் நூலும் வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசுகளை வென்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது வளர்ந்துவரும் பல எழுத்தாளர்கள் பல பரிசுகளைப் பல மட்டங்களிலும் வென்று வருகின்றார்கள். சிறுகதை, நாவல், கவிதை, நாடகம்,திறனாய்வு, கட்டுரை எனப் பல சிறந்த ஆக்கங்களைப் படைக்கவல்ல சிறந்த படைப்பாளிகள் பலர் வவுனியாவில் வாழ்கின்றார்கள். இனி வருங்காலத்தில் இன்னும் பல சாதனைகள் எட்டப்படும் என்ற நம்பிக்கை பூரணமாக உண்டு.

இறுதியாக, இயலுமானவரை தகவல்களைச் சேகரித்து இந் நூலை ஆக்கியுள்ளேன். எதிர்காலத்தில் விரிவான ஆய்வுகளுக்கு அத்திவாரமாக இந்நூல் அமையும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இந்நூலுக்கு தகவல்களைத் தந்துதவிய இலக்கிய அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். குறிப்பாக தமிழ்ப் பேரறிஞர் அகளங்கன் அவர்களுக்கும், பத்திரிகையாளர் திரு. பி. மாணிக்க வாசகம், நண்பர் சி. வரதராஜன் அவர்களுக்கும் என் நன்றிகள் என்றும் உரியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1997 மார்கழி வரை வவுனியாவில் வெளியான நூல்களும் வவுனியா எழுத்தாளர்களினால் வெளியிடப்பட்ட நூல்களும் ஒரே பார்வையில்

சி. சிலம்புநாதபிள்ளையின் ஓமை அந்தாதி - கவிதை

வன்னியூர் கவிராயரின் "ஈழத்து தீபக காவியம்" - சிறுகதை

சி. யாமினியின் "நிலவே நீ மயங்காதே" -நாவல்

சரவணையூர் சுகந்தன், பூநகரி மரியதாஸ், அகளங்கன் ஆகியோரின் "வழிகாட்டி" - புதுக்கவிதை

புவனேந்திரராஜாவின் "ஈழத்துப் பாரதியார் கவிதைகள்" -கவிதை

அகளங்கனின் " 'செல்' 'வா' என்று ஆணையிடாய்" - அஞ்சலிக் கவிதை

அகளங்கனின் "சேரர் வழியில் வீரர் காவியம்" - குறுங்காவியம்

அகளங்கனின் "சமவெளி மலைகள்" - கவிதை

திலீபனின் "எனது ராகங்கள்" - கவிதை

கவிஞர் கண்ணையாவின் "கவிதைப் பூக்கள்" - கவிதை

அகளங்கனின் "தென்றலும் தெம்மாங்கும்" - கவிதை

அகளங்கனின் "அன்றில் பறவைகள் - நாடகங்கள்

அருணா செல்லத்துரையின் "வீடு" - நாடகங்கள்

அகளங்கனின் "இலக்கிய நாடகங்கள்" - நாடகங்கள்

மு. கிருஷ்ணகுமாரியின் "கர்நாடக சங்கீதம்" - இசை

த.ம.தேவேந்திரனின் "ஓடிவிளையாடு பாப்பா - பாகம் 1" - விளையாட்டு

த.ம.தேவேந்திரனின் "ஓடிவிளையாடு பாப்பா - பாகம் 2" - விளையாட்டு

த.ம.தேவேந்திரனின் "தமிழா திரும்பிப் பார்" - சிறுகைதத் தொகுதி

த.ம.தேவேந்திரனின் "தீ - 77" - சிறுகதைத் தொகுதி

த.ம.தேவேந்திரனின் "வொலிவோல்" - விளையாட்டு

த.ம.தேவேந்திரனின் " எங்களுக்கும் காலம் வரும்" - சிறுகதைத் தொகுதி

அகளங்கனின் " வாலி" - ஆய்வு இலக்கியம்

அகளங்கனின் " இலக்கிய தேறல்" - இலக்கியக் கட்டுரை

---

ஓ.கே. குணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி. மாணிக்கவாசகத்தின் "நம்பிக்கையோடு நிம்மதியை நாடும் யாழ்ப்பாணம்" – விவரணம்

அகளங்கனின் " நளவெண்பா" – இலக்கியம்

அகளங்கனின் " மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள்" – ஆய்வு

உடுவை எஸ். தில்லைநடராசாவின் "மந்திரக் கண்ணாடி" – சிறுவர் கதை

உடுவை எஸ். தில்லைநடராசாவின் "கடற்கன்னி" – சிறுவர் கதை

எஸ். அருளானந்தத்தின் "இன்பக் கனிகள்" – சிறுவர் பாடல்

எஸ். அருளானந்தத்தின் " பாட்டுப் பாடுவோம்" – சிறுவர் பாடல்

ஓ.கே. குணநாதனின் " நகைச்சுவைக் கதைகள்" – நகைச்சுவை

ஓ.கே. குணநாதனின் " வீர ஆனந்தன்" , "சுதந்திரம்" (இரட்டை நூல்) – சிறுவர் கதை

செங்கையாழியானின் "வாடைக்காற்று" – நாவல்

பெ.சு.மணியின் "நூற்றாண்டு விழாக்காணும் சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுகள்" – ஆய்வு

ந. கிருஷ்ணராஜாவின் "வண்ண மலர்கள்" – சிறுவர் பாடல்கள்

ஈழத்தீபனின் "கலையாத கோலங்கள்" – நாவல்

செல்லையாவின் "பஞ்சதோத்திரப் பாமாலை"

செல்லையாவின் "மஹாவிஷ்ணு போற்றித்திரு அகவல்"

வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையின் "கலை மருதம்" – மலர்

அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தின் "சிவதத்துவமலர்" – தொகுப்பு

வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபையின் "பண்டார வன்னியன்" – விழா மலர்

அகளங்கனின் " அகளங்கன் கவிதைகள்" –கவிதை

அகளங்கனின் " இலக்கியச் சிமிழ்" – இலக்கியம்

பொன். தில்லையம்பலத்தின் "திரு ஊஞ்சற் பாமாலை"

அகளங்கனின் " பன்னிரு திருமுறைகள் அறிமுகம்"

அகளங்கனின் " ஆத்திசூடி" – தெளிவுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையாவின் "செயா உலக நீதிக் கதைகள்" - சிறுவர் கதைகள்
அகளங்கனின் " கொன்றை வேந்தன்" - விளக்கவுரை
ஒகே. குணநாதனின் "மாயக்கிழவி" - சிறுவர் குறுநாவல்
அருணா செல்லத்துரையின் "நந்தியுடையார்" - நாடகம்
தேவேந்திரனின் "மெய்வல்லுனர் விளையாட்டுக்கள்"
அகளங்கனின் "சிவபுராணம்" - பொருளுரை
அகளங்கனின் "செந்தமிழும் நாப்பழக்கம்" - சிறுவர்இலக்கியம்
கண்ணையாவின் "தனிமூலிகையின் மருத்துவ சாதனை" - வைத்தியம்
வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்க "கதிரமலை பேரின்பக் காதல்"
வடக்குக்கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர் "மருத நிலா"
ஸ்ரீகணேசனின் "யாழ்ப்பாணத்துத் தமிழ் நாடக அரங்கு" - கட்டுரை.
ந. இரவீந்திரனின் "பின் நவீனத்துவமும் அழகியலும்" - கட்டுரை
அகளங்கன் தொகுத்த "ஆறுமுகநாவலர் சைவ வினா விடை"
அகளங்கனின் "நாம் அறிந்த நாவலர்"

NP 37648

15-5-1979



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல இம் முயற்சிக்கு நல்வாழ்த்துக்கள்

16-5-1979

**திரு. சு. நடராஜா**
**கிளை முகாமையாளர்**
**சிங்கர் ஸ்ரீலங்கா லிமிட்டெட்**
**கண்டி வீதி**
**வவுனியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INDRA BOOK BINDERS
464, TEMPLE ROAD,
DEPANAMA, PANNIPITIYA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org